விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 048 வள்ளுவர் ஆண்டு 2054 தை 22 ஞாயிற்றுக்கிழமை (05.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து!

## யாழிலிருந்து எதிர்ப்புப் பேரணி கிழக்கை நோக்கி ஆரம்பமானது




(யாழ்ப்பாணம்) "தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து" எனும் கோஷத்துடன் யாழிலிருந்து சுதந்திர தின எதிர்ப்புப் பேரணி கிழக்கை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படும்



### சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில்

- ஒற்றையாட்சியில் அதிகாரப் பகிர்வுக்கு நடவடிக்கை.
- அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்.
- காணிகள் விடுவிக்கப்படும்.
- நாட்டைப் பிளவுபடுத்த இடமளியோம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### சுதந்திர தின நிகழ்வில்
## தமிழில் தேசிய கீதம்

(கொழும்பு)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு 19

### இணுவில் கந்தசுவாமி கோயில்
## உலகப் பெருமஞ்சத் திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)


அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச உலகப் பெருமஞ்சத் 19

## 13வது திருத்தம் தொடர்பில்
### இந்தியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ரணிலுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

13வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் இந்தியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் வெளிவிவகார இரா 19



## லண்டனில் கரிநாள் போராட்டம்




19

## முன்னணியும் யாழில் எதிர்ப்புப் போராட்டம்




19

## ஹர்த்தாலால் தமிழர் தாயகம் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

ஹர்த்தாலால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தது.

75ஆவது சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாளாக அறிவித்து யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நடத்தும் மாபெரும் 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Young Men's Christian Association - Jaffna.

YMCA Jaffna

# Vacancy

## Post of Programme Secretary

YMCA Jaffna is accepting applications for the post of Programme Secretary. A job description is given below. Those interested should send their applications with updated Curriculum Vitae to **Chairman, Human Resource Committee, YMCA, 109 Kandy Road, Jaffna, on or before 20-02-2023.**

**Purpose:** The Program Secretary is a professional who is responsible for overseeing projects and programs within the organization. He/She will plan and implement projects with strong time, cost and quality management skills and team synergy with his/her subordinates.

**Description of the position**
Support planning and coordination of programme and _ its activities, Ensure implementation align with Vision, Mission, values and policies of the organization. Maintain budget and track expenditures/ transactions, Schedule and organize meetings/events and maintain agenda, Ensure technology is used correctly for all operations (video conferencing, Multimedia, presentations etc.) Able to write Project proposals, keep updated records and create reports. Support growth and program development of the organization.

**Educational qualification and Working experiences**
Bachelor Degree in Social science/Development studies/Humanitarian studies / project/ Programme management or related studies are preferred with minimum two years experiences in Charity or Non governmental organizations, Churches or any other Christian organizations. Or Diploma in Social science/Development studies/ Humanitarian studies/project/ Programme management or related studies are preferred with minimum four years experiences in Charity or Non governmental organizations, Churches or any other Christian organizations or Completed G.C.E. Advance Level with Social science/Commerce related subjects with four years working experiences in Charity or Non governmental organizations, Churches or any other Christian organizations.

**Knowledge and skills**
Strong spiritual conviction and deep Christian commitment, accompanied by ecumenical perspective. Proven experience as programme secretary/ coordinator/officer or similar position. Knowledge of program management and development procedures. Proficient in MS Office. Ability to work with diversity, grassroots level community and multi-disciplinary teams. Excellent time-management and organizational skills. Outstanding verbal and written communication skills in Tamil, English and spoken skill in Sinhalese [preferred]. Detail-oriented and efficient.

**Preferred Age: 25-45**

(C-5886)

Chairman
Human Resource Committee,


# குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

54 கிராம் எடையுள்ள ஹெரோய்னின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவரே வியாபார நோக்கத்துக்காக ஹெரோய்னை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7.33)


## மணமகள் தேவை

1980 மூல நட்சத்திரம் உதயத்துச் செவ்வாயில் பிறந்த தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. கிறிஸ்தவம், இந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு : 076 603 6044

(14504)

## மணமகள் தேவை

15.05.1985 UK PR உத்தரட்டாதி 1ம் பாதம், இராசி - மீனம், சூரியன் - செவ்வாய் 4 இல், உயரம் 5-10, கிரக பாவம் 18 1/2 B.com பட்டதாரி யாழ் பல்கலைக்கழகம். வயது வித்தியாசம் 5-7, இந்து கௌரவகுடும்பம் ,பட்டதாரி அல்லது A/L படித்த பெண் தேவை.

Mobile : 077 914 7318
Viber : 076 668 8199

(14506)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி **பாலகிருஷ்ணன் புஸ்பலாதேவி** அவர்கள்
03.02.2023 இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

(14502)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர் முத்துலிங்கம் சஞ்ஜீவன்

(தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்)



பிறந்தன இறக்குமாம் இறந்தன பிறக்குமாம்
தெள்ளியர் ஆயினும் ஊழ்வினை நுழையுமாம்
இயற்கையைத் தெளியினும் இடைவழிப் பாடை ஏன்?
பெற்றது நோகுதே! பிறந்தது ஏங்குதே!
இத்தனை அவசரம்? இதற்கெது தத்துவம்?

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.02.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 07.02.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் இரங்கல்கள் தெரிவித்த அனைவருக்கும் பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

தோற்றம் 01.11.1982
மறைவு 08.01.2023

இல.12, சங்கிலியன் வீதி, நல்லூர்.
077 127 8773, 077 160 1622

(14505)

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாள்'

# வடக்கு- கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு



யாழ்.நகர்







நெல்லியடி



சாவகச்சேரி



கிளிநொச்சி

(4-33-60-104-100-316-30)

# உண்மையான சுதந்திரமே அனைவருக்கும் தேவை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

**(கொழும்பு)**

**இந்த நாட்டில் சகல இனத்தவர்களுக்கும் சம உரிமையுள்ள உண்மையான சுதந்திரம் வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரம் பெறுவதற்கான பயணம் இரத்தமும் கண்ணீரும் வியர்வையுமான பயணமாகுமென்பதுடன், இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்த வீரர்களை இந்தத் தருணத்தில் மிகவும் பெருமையுடனும் மரியாதையுடனும் நினைவுகூர வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பெற்ற சுதந்திரத்தை தேசிய அங்கத்துவம், கல்வி, மதம் என்பவற்றில் அர்த்தமுள்ளதாக்க நாம் தவறிவிட்டோம்.ஒரு நாடு என்ற வகையில் சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் தோல்விகள் கடந்த 75 ஆண்டுகளாக நமக்கு அனுபவத்தை வழங்குகின்றன.

குறிப்பாக இலங்கை சமீப காலமாக அடைந்துள்ள பொருளாதார மந்தநிலை, நாட்டின் வரலாற்றில் மிகவும் சோகமான மற்றும் பாரதூரமான நிலைமையாகும்.


மேலும் முறையான முற்போக்கான வேலைத்திட்டங்களின்றி அதிலிருந்து மீள்வது கடினம்.குறுகிய இனவாதம் மற்றும் வகுப்புவாதத்தில் சிக்கிக் கொள்வது உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான வழி அல்ல, உண்மை



யான சுதந்திரத்தை அடைய அனைவருக்கும் சம உரிமையுள்ள குடிமக்களாக நாம் ஒன்றுபட வேண்டும்.

அனைத்து குடிமக்களின் தேவைகளையும் சுயமரியாதையையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புடன், வேற்றுமையில் ஒற்றுமையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4)


# யாழ். பல்கலையில் கறுப்புக் கொடி!



(யாழ்ப்பாணம்)

நாட்டில் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.

75 ஆவது சுதந்திர தினத்தை தமிழர் பிரதேசங்களில் கரிநாளாக கொண்டாடுமாறு அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் யாழ்ப்பாண பல்கலைக் கழக கொடிக் கம்பத்திலும் பல்கலைக்கழக சூழலிலும் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. (4-33-104)



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வின் யாழ்ப்பாண மாவட்ட மட்ட நிகழ்வு யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்று இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்து



யா/ மட்டுவில் சாந்தநாயகி
வித்தியாலயத்தின்
ஆரம்பக் கல்வி ஆசிரியை

திருமதி
## உதயகலா குலம்
அவர்கள்
*(SLTS-I, Primary Trd)*

### சேவை விபரம்

28.06.1990 - 30.06.1996 - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
31.03.1996 - 26.05.1996 - யா/புத்தூர் மெ.மி.த.க பாடசாலை
27.05.1996 - 13.11.1996 - மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்
14.11.1996 - 06.01.1998 - மு.பனிக்கன்குளம் அ.த.க பாடசாலை
07.01.1998 - 05.03.2000 - மு/வவுனிக்குளம் மத்திய சுலுசு அ.த.க. பாடசாலை
06.03.2000 - 11.03.2001 - மு/மல்லாவி மத்திய கல்லூரி
12.02.2001 - 01.01.2003 - மு/வவுனிக்குளம் மத்திய சுலுசு அ.த.க. பாடசாலை
02.01.2003 - 01.02.2015 - யா/ மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை
02.02.2015 - 05.02.2023 - யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்

33 வருடகாலம் ஆரம்பக்கல்வியில் ஆசிரியராக அரும்பெரும் சேவையாற்றி 06.02.2023 இல் மணிவிழாக் காணும் வேளையில் அவருடைய தன்னலமற்ற மகத்தான சேவைதனை, உளமாரப் பாராட்டி, அவரின் ஓய்வு காலம் அவரது குடும்பத்தினருடன் சிறப்பாய் அமைய எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டி நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(C-5907)

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்.

# சர்வதேச நாணய நிதியத்துடன் மார்ச் 31 இற்குள் அரசு ஒப்பந்தம்

## அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்குள் சர்வ தேச நாணய நிதியத் துடன் உடன்பாட்டை எட்டுவதற்கு எதிர் பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடன் உத்தர வாதத்திற்காக தற்போது சீனாவுடன், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியா ஏற்கனவே கடன் உத்தர வாதங்களை வழங்கியுள்ளதாகவும், மீதமுள்ள கடனாளர்களுடன் பேச்சுவார்த்தை விரைவில் நிறைவு பெறும் என்றும் கூறியுள்ளார்.

மோசமான கொள்கைகள் காரணமாக இலங்கை தற்போதைய இக்கட்டான நிலையில் இருப்பதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

இருப்பினும் அரசாங்கம் மக்களின் இன்னல்களைப் போக்கபாடுபடுகிறது என வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம-7)

# 10 ஆண்டு நினைவஞ்சலி

திருவாட்டி
## செல்லமலர் சற்குணராசா

திதி -பூரணை
*05.02.2023*

பிறப்பு - 20.01.1962
இறப்பு - 26.01.2013



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானடைந்து பத்து ஆண்டு
ஆனாலும் அம்மா ஆறாது
உங்கள் பிரிவுத்துயர்!
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம்மை வழிநடத்திய அந்த நாட்கள்
எம் நினைவலைகளில்
என்றும் சுழல்கிறதே அம்மா!
நீங்கள் எம்மை விட்டு நீண்டதூரம்
சென்றாலும் உங்கள் அறிவுரைகள்
அரவணைப்புக்கள் என்றும் எங்கள்
நெஞ்சங்களில் உயிர்வாழும் அம்மா!
பிரிக்க முடியாத சொந்தமும்
மறக்க முடியாத பந்தமும் தவிர்க்க
முடியாத உயிரும் எல்லாமே
உன் அன்பு மட்டுமே !
பத்து ஆண்டு என்ன பத்தாயிரம்
வருடங்கள் ஆனாலும் உங்கள்
நினைவாய் வாழ்ந்திடுவோம்!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!!!

இல. 23, 6ஆம் ஒழுங்கை பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14510) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## தம்பிராசா மகாலிங்கம்
*(இளைப்பாறிய தபால் அதிபர்)*

பிறப்பு 31 . 03 . 1941



இறப்பு 03 . 02 . 2023

வேலணை வடக்கு பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கையும், யாழ்ப்பாணத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மகாலிங்கம் 03.02.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து (செல்லையா உபாத்தியாயர்) - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், பொன்மயிலாம்பிகையின் பாசமிகு கணவரும், வரைமகள் (ஆசிரியர் - யா/இந்து மகளிர் கல்லூரி), அலர்மகள் (பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (ஆசிரியர் - யா/இந்து மகளிர் கல்லூரி), திலீபன் (பிரான்ஸ்), சிவதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நயனி, தருணிகா, வரேண்யன், அபராஜிதன் (கணக்காளர் - பிரான்ஸ்), கோபிராஜிதன், மகிஷா, விதுரன், விசாலகன், விதுசா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பழனியப்பா, விசாலாட்சி, கணேசு, மகாலட்சுமி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சோமசேகரன், சண்முகரட்ணம், பூரணானந்தம்பிள்ளை, திருநிலைநாயகி அம்மா, பாலேந்திரன் மற்றும் செல்வேந்திரன், விஜயேந்திரன், கலாமணி, காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விஸ்வலிங்கம், இரத்தினாம்பிகை, இராமசாமி, வள்ளிநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.02.2023) செவ்வாய்க்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.18, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (14508) தகவல் : குடும்பத்தினர்


## நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புக்கள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

**Skyline Water Proofing**

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
www.skylineholders.com
(14509)


# யா/நல்லூர் மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள்
ஆசிரியை
அமரர் திருமதி **புஸ்பலாதேவி பாலகிருஷ்ணன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

(C-5906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
அபிவிருத்தி லொத்தர்

# நமோ நமோ தாயே




சவால்களை ஆசீர்வாதமாக மாற்றிக்கொண்டு தடைகளினால் வலுவடைந்து
வெற்றிகரமான தேசமாக முன்னோக்கி செல்வோம்...

சுதந்திரத்தின் 75 வது ஆண்டு நிறைவிற்கான
அபிவிருத்தி லொத்தர் சபையின் குறிப்பு

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

(சி-1912)
இல-35[illegible] கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ் கொழும்பு 02.
www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் ஆயுதமேந்தி கேட்டவற்றை பேனாவினால் வழங்க இடமளிக்க முடியாது

## சரத் வீரசேகர



(கொழும்பு)

**பிரபாகரன் ஆயுதமேந்தி கேட்டவற்றை பேனாவினால் வழங்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இந்தியாவின் கடும் அழுத்தத்தினால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க முயற்சிக்கிறார் என்றும் குற்றம் சாட்டினார்.

நெருக்கடிக்கு மத்தியில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக குறிப்பிட்டு நாட்டில் பிரச்சினைகளை தோற்றுவிக்க வேண்டாம் என மகா சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

மகாசங்கத்தினரின் ஆலோசனைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதிப்பளித்து செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகவும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் இந்தியாவினால் பலவந்தமாக இலங்கைக்கு அமுல்படுத்தப்பட்டது என்றும் இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சில பாதுகாப்பு வழி முறையை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தகர்க்க முயற்சிக்கிறார் என்றும் குற்றம் சாட்டினார். (4)

# யாழைச் சேர்ந்த நால்வர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் யாழில் வசிக்கும் ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 4 இலங்கை தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இதனால் கடந்த மார்ச் முதல் இலங்கையில் இருந்து 218 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்திற்கு அகதிகளாக சென்றுள்ளனர். (4-285)

# யாழ்.சிறையில் இருந்து எட்டுப்பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை சுதந்திர தினத்தினை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் குறித்த 8 கைதிகளும் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த 7 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக 8 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-33)

# சாவகச்சேரியில் தனித்திருந்த மூதாட்டி வீட்டில் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டுவில்-கிராம்புவில் கிராமத்தில் தனித்திருந்த மூதாட்டி வீட்டில் நேற்று சனிக்கிழமை காலை திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மூதாட்டியின் வீட்டில் இருந்த காஸ் சிலிண்டர், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் தொலைபேசி ஆகியன திருடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)


## மணமகள் தேவை

15.01.1990, நட்சத்திரம் பூரம், 3 ஆம் பாதம், கிரகபாவம் 33-செவ்வாய் 7 இல், உயரம் 5' 8, 5 வயது வித்தியாசம், அரச தொழில், அரச தொழில் புரியும் மணமகள் தேவை. ஆசிரியை விரும்பத்தக்கது. இந்து கௌரவ குடும்பம்.

Mobile : 077 914 7318
Viber : 076 668 8199

(14506)


# மாற்று வலுவுடையோரிடமிருந்து போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கமானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 33 ஆவது ஆண்டு விழாவினை கொண்டாடவுள்ளது. குறித்த ஆண்டு விழாவை முன்னிட்டு மாற்று வலுவுடையோரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும் புனர்வாழ்வுச் சங்கத்தால் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போக்குவரத்து இடையூறுகளை கருத்திற் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த மாற்றுவலுவுள்ளவர்களுக்கு கீழ்வரும் போட்டிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடித உறை ஒட்டுதல், தையல், மாலை கட்டு தல், கோலம் போடுதல், விளக்கு மாறு அடித்தல், கதிரை பின்னுதல், சித்திரம் வரைதல், கட்டுரை, கவிதை, பாட்டு, பேச்சு, நாடகம், நடனம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்று வலுவுடையோர் தங்களுடைய விண்ணப்பங்களை அலுவகைத்தில் பெற்று பூரணப்படுத்தி 20/02/ 2023 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

ஒருவர் ஆகக் கூடியது மூன்று போட்டிகளில் மட்டுமே பங்குபற்ற முடியும். மாற்று வலுவுடையோர் சங்கத்தின் ஊடாக பதிவு செய்தவர்கள் மாத்திரம் இதில் பங்குபற்ற முடியும்.

இது வரை தங்களைப் பதிவு செய்யாதவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள மாற்று வலுவுடையோர் சங்கத்தின் ஊடாக அல்லது எமது சங்கத்தின் ஊடாக தங்களை பதிவு செய்து இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது 021 221 5925 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)


# இராசிபலன்

05.02.2023
தை 22, ஞாயிற்றுக்கிழமை
பூரணை பின்னிரவு 12.42 மணிவரை


பூசம் பிற்பகல் 1.06 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை

தைப்பூசம், பூரணை விரதம்
சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்


வளவன்


மேஷம்

மற்றவர்கள் வாங்கிய பொருளைப்பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


கடகம்

கனிவாகப் பேசி காரியம் சாதித்துக்கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


துலாம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.


மகரம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்


குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய அனுகூலமுண்டு, உறவினர்களளின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


சிம்மம்

திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம்.


கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், கௌரவமான நாள்.


மிதுனம்

உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.


தனுசு

பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மீனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

கல்வியே மனிதனை செம்மைப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 382
Viber 076 636 3378



# ஈழத்தமிழினத்தின் எதிர்காலம் இனி எப்படியாக அமையும்?

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் தமக்குள் அரசியல் ரீதியிலான புதிய கூட்டணிகளை அமைப்பதும் பின்பு அதை உடைப்பதும் மீண்டும் புதிய கூட்டணிகளை அமைப்பதும் அதை மீண்டும் உடைப்பதுமாக தங்கள் காலத்தை இதுவரை வீணடித்தார்களே தவிர, உருப்படியான ஒரு காரியத்தையும் ஈழத் தமிழ் ஜனநாயக அரசியலில் செய்ததாக பதிவுகள் எதுவும் இல்லை.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தேர்தல் காலங்களில் தங்கள் கட்சியின் மீதும் தங்கள் சின்னத்தின் மீதும் வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்ற தங்கள் வேற்றுமை என்ற கொள்கையின் மீதும் வைத்த அக்கறையை மக்களின் எதிர்கால அரசியல் நலன்களின் மீது வைக்கவில்லை என்பதே இது வரை ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் பெரும் குறையாகவே இருந்து வருகின்றது.



தங்களுக்குள் குறைந்தபட்ச விட்டுக் கொடுப்புக்களே இல்லாத ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளின் முக்கிய பிரச்சினையாக இதுவரை காலமும் இருந்து வருவது தலைமை என்பது தான். இது ஆயுத ரீதியிலான அமைப்புகளாக இருந்த போதும் சரி, தற்போதைய ஜனநாயக அரசியல் ரீதியிலான கட்சிகளாக இருக்கும் போதும் சரி, இது ஒரு தொடர்கதையாகவே ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் நகர்ந்து வருகின்றது.

யார்..? தலைவராக இருந்தால் என்ன தன் மண் சார்ந்த மக்களுடைய அரசியல் ரீதியிலான நலன்களின் மீதும் அவர்களுடைய எதிர்கால அரசியல் அபிலாஷைகளின் மீதும் அக்கறை கொள்ளும் ஒருவரால் அரசியல் தலைமைத்துவப் போட்டியைப் பற்றி என்றுமே சிந்திக்க முடியாத ஒரு சூழலே நிச்சயம் ஏற்படும். இதுவே ஆரோக்கியமான ஜனநாயக அரசியலுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

தன் சுயநலத்தைத் திறந்து தன் இனம் சார்ந்த மக்களுக்கு சுதந்திரத்தை வாரி இறைப்பவன் அரசியலில் என்றும் தொண்டனாகின்றான். அவன் மக்கள் ஜனநாயகத்தில் தலைவராகின்றார்கள்.

அந்த அரசியல் கொள்கை ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் நிச்சயம் தழைக்குமானால் தலைமைத்துவப் போட்டி என்ற ஒன்று நிகழாத ஒரு சூழலே எப்போதும் ஏற்படும்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடந்த தமிழரின் உரிமைப் போரில் எண்ணற்ற மக்களும் மற்றும் மாவீரர்களும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தார்கள். அவர்கள் ஒருபோதும் தலைமைத்துவப் போட்டியில் பங்குபற்ற கடுகளவும் விருப்பம் கொள்ளவில்லை என்பதை தற்போதைய ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் உணர்வுபூர்வமாக சிந்திக்க முற்பட வேண்டும்.

> “ **ஈழத் தமிழ் அரசியல் பரப்பில். யார்..? தலைவர் என்பதை விட, யார்..? தலைமைத்துவத்தை மக்களுக்காக தியாகம் செய்து மக்களின் தொண்டனாகின்றார்கள் என்பதே இனிவரும் காலங் களில் ஈழத் தமிழ் அரசியலின் புதிய கலாச்சாரமாக இருக்க வேண்டும். இதுவே என்றும் மக்களின் விருப்பமாகவும் அமைய வேண்டும்.**

ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் யார்..? தலைவர் என்பதை விட, யார்..? தலைமைத்துவத்தை மக்களுக்காக தியாகம் செய்து மக்களின் தொண்டனாகின்றார்கள் என்பதே இனிவரும் காலங்களில் ஈழத் தமிழ் அரசியலின் புதிய கலாசாரமாக இருக்க வேண்டும். இதுவே என்றும் மக்களின் விருப்பமாகவும் அமைய வேண்டும்.

ஜனநாயக ரீதியிலான ஈழத் தமிழ் அரசியலில் தமது தீர்வுத் திட்டமான சமஷ்டியைப் பற்றியோ அல்லது சுயாட்சியைப் பற்றியோ இனி வரும் காலங்களில் மக்கள் சிந்திக்க போவதில்லை. எவர் தங்கள் இலக்குகளை நோக்கி பல தியாகங்களை ஏற்று தங்களை ஓரணியாக அழைத்துச் செல்கின்றார்களோ அவர்களைப் பற்றிதான் பேசு பொருளாக மக்கள் எதிர்கால அரசியலில் சிந்திக்கப் போகின்றார்கள்.

ஈழத் தமிழ் மக்களின் இறுதியும் மற்றும் உறுதியுமான நம்பிக்கையான தெரிவாக இருப்பது தற்போது எங்கும் கட்சி ரீதியாகவும் மற்றும் சின்னம் ரீதியாகவும் சிதறிக் கிடக்கும் ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளை மட்டுந்தான். அவர்களை விட்டால் மக்களுக்கு வேறு தெரிவு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களை எப்போதும் ஒரு புள்ளியில் பார்க்கவே மக்கள் என்றும் விரும்புகின்றார்கள்.

ஒரு சின்னம், ஒரு கூட்டணி, ஒரு கொள்கை இதுவே என்றும் பிளவுபடாத வடக்கு - கிழக்கு தாயகத்துக்கு ஒரு நிரந்தரமான தீர்வாக இருக்க முடியும். மக்களின் எண்ணத்தையே உங்களுடைய அரசியலாக்கிக் கொள்ளுங்கள். உங்களின் சுயநல அரசியலை மக்களின் எண்ணமாக மாற்ற ஒரு போதும் முயற்சிக்கக் கூடாது.

**சாம்-ரமேஸ்குமார்**

# தடு மாறும் தடம் மாறும் தமிழ்த் தலைமைகள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து வாளொடு முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி என்கின்றோம். ஆனால் அந்த தமிழ்க் குடி இப்போது படும்பாடு மிகப் பயங்கரமானது.

அது தமக்கான ஆயுத பலத்தையும் இழந்து அரசியல் பலத்தையும் இழந்து அறுந்து வீழ்ந்து கொண்டிருக்கும் தொங்கு பாலத்தின் நடுவே நிற்பதாய் இருக்கிறது.

தமிழினத்தின் இந் நிலைக்கு யார் காரணம் என்பதை நாம் உற்று நோக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை.

ஏனெனில் இதற்கு சாணக்கியம் இல்லாத சுயநல அரசியல் நோக்கம் கொண்ட எம் தமிழ்த் தலைமையே காரணம் என கைவிரலை சூப்பும் சிறு குழந்தை கூட கூறிவிடும்.

எமக்கான பலம் எது என்பதைக் கூட அறிய முடியாத முட்டாள் தனமான முடிவுகளை எடுக்கும் இவர்களிடம் சுய ஆட்சியைக் கொடுத்தால் அதை எப்படி கொண்டு நடத்துவார்கள் என்பதை எண்ணிப்பார்த்தால் "நந்தவனத்திலோர் ஆண்டி" நாட்டார் பாடல் நினைவில் வருகிறது.

ஆயுத பலம் இழந்து வன்னி பெரும் நிலப்பரப்பில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து பல இலட்சம் உயிர்களை இழந்து அரசியல் பலத்திலேனும் மீண்டெழுவோம் என எண்ணிய தமிழினத்திற்கு கிடைத்தது படுதோல்வியே. வசைபாடும் அரசியல் களத்தை உருவாக்கி அதனூடே தமது பிரிவுக்கு அர்த்தம் தேடிக் கொண்டிருக்கும் இவர்களையா நாம் இதுவரை ஆதரித்தோம் என ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலை குனிகிறது.

ஒன்றாய் இருந்த போது நம்மால் எதையும் சாதிக்க முடியவில்லை. இப்போது பிரிந்து நின்று வசை பாடல் அரசியல் நடத்தி எதைச் சாதித்து விடப்போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எம் இனத்திற்குள் ஏற்பட்ட இந்த பிளவு எதிரிக்கு காய் நகர்த்தும் கருவி என்பதை நாம் புரியாது விட்டு விட்டோமே.

தமிழ்த் தேசியம் பேசும் நாம் அதன் வழி நடக்கிறோமா என்று எம்மை நாமே தராசிலிட்டு பார்க்க வேண்டிய நேரம் இது.

மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்ற சாணக்கியத்தை நன்றாகப் புரிந்து கொண்ட எம் அரசியல் தலைமைகள் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலிலும் அதே கைங்கரியத்தையே பிரயோகிக்க போகிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

நாம் எமக்குள் அடித்துக் கொள்ளும் ஒவ்வொரு நொடியும் எமது பலம் சர்வதேச ரீதியில் இழக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் இன்னமும் உணர்ந்து கொள்ளாதது ஏன் என்பது தான் புரியவில்லை.

தமிழினம் ஒற்றுமையை மட்டுமே விரும்புகிறது. இதை உடைத்து விட்டு தேர்தல் வெற்றியை குறுகிய நோக்கத்துக்குள் அடக்கும் சகலருக்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

**• அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## சிங்கள தாதிய உத்தியோகத்தரின் மனிதநேயத்தை கண்ணுற்றபோது...



**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கிளிநொச்சி ஊடகவியலாளர் நிபோஜன் விபத்தில் மரணமடைந்த செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். ஊடகத்துறையில் தன்னை அர்ப்பணித்த நிபோஜனின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய மௌனத்தைத் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** அது சரி எங்கட சம்பந்தர் ஐயாவுக்கு உடல் நிலை சரியில்லை என்று அறிந்தனான். இப்ப எப்படி நிலைமை இருக்குது.

**கங்காணி:** வயது மூப்பு எண்டால் நோய் தன்ரபாட்டில வரும். சம்பந்தர் ஐயாவுக்கும் வயது தொங்கலுக்கு வந்திட்டுது.

**மூப்பர்:** தமிழ் மக்களின்ர தலைவராக இருப்பவர் மிகுந்த துடிப்பும் அரசியல் அனுபவமும் ஆளுமைத் திறமும் உடையவராக இருக்க வேணும்.

ஆனால், எங்களுக்கு தலைவராக இருப்பவர் வயது மூப்பால எதுவும் இயலாதவர் எனும் போது, எங்கட அரசியல் சாணக்கியம் எப்படி இருக்குது எண்டு ஒருக்காப் பாருங்களன்.

**சாத்திரியார்:** அது சரி சம்பந்தர் ஐயாவின்ர விடயத்தில இயற்கை தன்ர கடமையைச் செய்தால்; என்ன நடக்கும்.

**விதானையார்:** என்ன நடக்கிறது. சம்பந்தர் ஐயாவின்ர உடல் நிலை இனிச் சரிவராது எண்ட பிறகுதானே கூட்டமைப்பைக் கலைக்க வேணும் எண்ட சிந்தனை தமிழரசுக் கட்சிக்குள்ள எழுந்தது.

**சிறாப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:** சிறாப்பர் ஐயா! சம்பந்தர் ஐயாவுக்கு ஏதும் ஆயிற்றுது எண்டால்! கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார்? என்ற பிரச்சினை கட்டாயம் ஏற்படும்.

அப்படியொரு பிரச்சினை ஏற்பட்டால் செல்வம் அடைக்கலநாதன் அல்லது தர்மலிங்கம் சித்தார்த்தன் இருவரில் ஒருவர் தான் தலைவராக வருவினம்.

ஆகையால கூட்டமைப்பைக் கலைத்து விட்டால் எல்லாம் சரியாகிவிடுமல்லோ.

**சிறாப்பர்:** அட, நாசமறுப்பு இப்பதானே எனக்கு விளங்குது. தங்கட கட்சி விசயங்களில இப்படியான இராஜதந்திரம் இருக்கிறவியள் எங்கட தமிழ் மக்களின்ர பிரச்சினையில அந்த இராஜதந்திரத்தைப் பிரயோகிக்க முடியாமல் இருப்பது தான் ஏனெண்டு தெரியாமல் இருக்குது.

**பண்டிதர்:** அதுசரி தெரியாமல் தான் கேட்கிறன் சம்பந்தர் ஐயாவுக்கு ஒண்டு நடந்திட்டால், தமிழரசுக் கட்சியின்ர நிலைமை எப்படி இருக்கும்.

**விதானையார்:** தமிழகத்தில ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.கவின்ர நிலைமை எப்படியோ அப்படித்தான்.

**பண்டிதர்:** அப்படி எண்டால், அங்க ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ் போல இஞ்ச ஆரு இருப்பினம்.

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது. அந்தச் சிரிப்பொலியோடு எழுந்த சாத்திரியார் சதாசிவம் ஆஸ்பத்திரிகளில இப்ப மருந்துக்குப் பெருந் தட்டுப் பாடு. எனக்குக் கிளினிக்கில தாற மருந்துகளை இப்ப பிறை வேற் பார்மஸிகளில தான் வாங்க வேண்டி இருக்குது.

நான் ஒருக்கா பார்மஸிக்குப் போயிற்று வாறன். எனக் கூறிய படி சாத்திரியார் வெளிக்கிட்டார்.)

**கங்காணி:** சாத்திரியார் சொல்லத்தான் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில நடந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகத்திற்கு வருகுது.

**சிறாப்பர்:** கங்காணியார் என்ன சொல்லுறியள்.

**கங்காணி:** கடந்த ஒருசில தினங்களுக்கு முன்னர் திடீரென கை கால் வழங்காமல் போன வயதான ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதித்தினம்.

அவரோட அவரின் வயதான மனைவி மட்டுமே துணைக்கு வந்திருந்தார்.

வறுமையின் கொடுமையை அந்த வயதான தம்பதியரின் முகம் உறுதி செய்திருந்தது.

இந்த நேரத்தில நோயாளர்களைப் பார்வையிடுகின்ற மருத்துவர் ஒருவர், அம்மா! ஐயாவுக்கு மூக்கால வயர் விட்டுத்தான் சாப்பாடு கொடுக்க வேணும். வெளியில போய் அந்த வயரை வாங்கி வாருங்கள் எனக் கூறியபடி ஒரு சிட்டையைக் கொடுத்தார்.

கையில காசு இல்லாத அந்த வயோதிபத் தாய் எதுவும் செய்ய முடியாமல் திகைத்து நின்ற போது, நிலைமையை அவதானித்த ஒரு சிங்கள ஆண் தாதிய உத்தியோகத்தர்; அந்த மருத்துவரிடம் சென்று மூக்கால விடுகிற வயர் ஸ்ரொக்கில இருக்குது. அதைப் போடுவம் எண்டு கூறி அந்த வயதான அம்மாவின் கையில் இருந்த சிட்டையை மீளப் பெற்றுக் கொண்டார்.


இதைப் பார்த்த போது, அந்த சிங்கள ஆண் தாதிய உத்தியோகத்தரிட்ட இருந்த மனிதநேயத்தைக் கண்டு என் கண்கள் கலங்கிப் போயிற்று.

இவ்வாறு கூறிய கங்காணி, தன் கண்களைத் துடைத்துக் கொள்ள, உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்ற இசை, காற்றோடு கலந்து வர இடையில் குறுக்கிட்ட வாத்தியார் வைத்திலிங்கம் மனிதநேயம் ஆரிட்ட இருக்குதோ அவர்கள்தான் கடவுளுக்கு ஒப்பானவர்கள். மனிதநேயம் இருப்பவர்கள் ஒருபோதும் இன, மத பேதங்களைப் பார்க்க மாட்டார்கள்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்கு மரணத்தை நினைக்க பயமாக இருக்கிறது வியாசரே?

**சிவம் வதிரி**

**எதிர்வரும் தேர்தல் எப்படி அமையும் என்று கருதுகிறீர் நீர்?**

இவ்வளவு நாளும் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்த நாம் இப்போது குண்டுசி முனையளவில் குதிரை ஓட்ட முனைந்திருக்கிறோம்.
இது எப்படி ஆகப் போகிறது என்ற பயம் எம் அரசியல் தலைவர்களிடத்தே இல்லை. ஆனால் தமிழினத்தின் மனங்களில் நிறையவே உண்டு.
தமது சுயநலன்களுக்காக தமிழினத்தின் தலைகளை அடகு வைக்கும் நாசகார வேலையில் ஈடுபடும் எம் தமிழ் தலைமைகளின் செயற்பாடு தென்னிலங்கைக் கட்சிகளின் எழுச்சிக்கு வழி வகுக்கும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

**அகிலன் கனகராயன் குளம்**

**ஐயா வியாசரே சுதந்திரம் என்பது எது ஐயா? தமிழினத்துக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதா?**

மானையும் புலியையும் ஒரு கூட்டில் அடைத்துவிடுவது ஒரு நாளும் சுதந்திரம் ஆகாது.
புலி மானை வேட்டை ஆடுமே தவிர மான் ஒரு நாளும் புலியை எதிர்த்து நில்லாது.
மாறாக தன்னை காப்பாற்ற ஓட்டம் எடுக்கும். அடைக்கப்பட்ட கூட்டில் மான் எங்கு ஓடி ஒளிந்துவிட முடியும்.
உண்மையில் சுதந்திரம் என்பது கூண்டைத் திறந்து விடுவதே. அதன் பின் புலி மானைப் பிடிக்க முயலும்.
மான் தன் உயிரைக் காக்க ஓடி ஓழிக்க முனையும். இதுவே இயற்கை. இதுவே நியதி. இதுவே. இறைவனின் படைப்பு.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**13 ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் அது தமிழினத்துக்குப் போதுமானதா வியாசரே?**

தமிழினத்தின் உரிமைகளைத் தர மறுத்ததினால்தான் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது என்ற உண்மையை பேரினவாத அரசுகளும் சர்வதேசமும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
13 ஆவது திருத்தச் சட்ட மூலம் என்பது ஓரளவுக்கு தமிழினத்தின் அபிலாசைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய சட்ட மூலம்.
அதைக் கூடத் தர மறுக்கும் அரசுகள் அதற்கு மேல் எவ்வாறு தருவார்கள்.
அதனால் 13 குறித்து தமிழினத்தின் மனங்களில் என்ன உள்ளது என கேட்டறிவதே சிறந்தது. நடக்குமா?




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தருஷ் வதிரி**


**பொருளாதாரச் சிக்கல் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களை வாட்டுகிறதே வியாசரே?**

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஓர் இரு நாட்கள் நின்று பாருங்கள்.
வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் படும் துன்பம் புரியும்.
மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. பிளாஸ்ரர் முதல் கொண்டு பல அத்தியாவசிய மருத்துவ தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறார்கள் வைத்தியர்கள்.
ஆனால் எம்மவர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் தினம் போதைக்கே கோடிகளைக் கொட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அரச வைத்தியசாலைகள் மருத்துவப் பொருட்கள் இன்றி முடங்கினால் அது எப்பேற்பட்ட தாக்கத்தைச் செலுத்தும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். சிவசிவா மனம் வெடித்து விடுகிறதே.

**ரிதுகேஸ் மந்துவில்**

**வியாசரே நான் யார் என்று தேடினேன் விடை கிடைக்கவில்லையே ஏன்?**

எனக்குள் இருக்கும் என்னைத் தேடினால் அந்தத் தேடலில் பல ஆச்சரியங்களுக்கு விடை கிடைக்கும்.
எனக்குள் இருக்கும் நான் ஐத் தேடினால் அது அகங்காரத்தின் வடிவமே.
நான் என்ற அகங்காரம் கொண்ட எவரும் வாழ்வில் நிலைத்ததாய் வரலாறு இல்லை.
ஆதலால் உங்களுக்குள் இருக்கும் நான் என்ற அகங்காரத்தைத் தூக்கித் தூர எறிந்து விடுங்கள்.
உங்களுக்குள் இருக்கும் உங்களைத் தேடுங்கள். அந்தத் தேடலில் அர்த்தமுண்டு.



ஐயா வியாசரே சுதந்திரம் என்பது எது ஐயா? தமிழினத்துக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதா?

**சுகந்தன் சுன்னாகம்**

**எனக்கு மரணத்தை நினைக்க பயமாக இருக்கிறது வியாசரே?**

உலகில் உண்மையானது மரணம் ஒன்றே.
நாம் அதை நினைத்துப் பயப்பிடுவோமாக இருந்தால் அது எங்களை நிழல் போலத் துரத்தத் தொடங்கிவிடும்.
ஆதலால் தான் மனிதனுக்கு மரணம் எப்போது என்பதை கண்டுபிடிக்க முடியாத படி இறைவன் முடிச்சுப் போட்டிருக்கிறான்.
வாழ்வது குறுகிய காலம் இதில் அன்பையும் தூய சிந்தனையையும் விதைத்து நாம் வாழும் குறுகிய காலத்தை அர்த்தமுள்ளதாக்கி நம் இறப்பின் பின்பும் நம்மையும் நம் பெயரையும் அடுத்தவர் உச்சரிக்கச் செய்வோம். இதுவே வாழ்வின் தத்துவம்.

**சுதன் குப்பிழான்**

**பயங்கரவாதத்தை இல்லாதொழிப்போம் என்று சொல்பவர்கள் இன்றும் அரசுக்கு எதிராகப் பேசுபவர்களை அடைக்கிறார்களே வியாசரே?**

தமிழினத்தின் பிரச்சனை தீரும் என நீங்கள் நினைக்கிறீர்கள் என்றால் உங்களைப்போல முட்டாள்கள் வேறு யாரும் இல்லை என்பதே பொருள்.
சிறுபான்மை இனத்தை வதைத்து அந்த வதைப்பில் இன்பம் காணும் ஆட்சியாளர்கள் ஒருபோதும் எமக்கு உரிமைகளைத் தந்துவிடார்.
வயிற்றுப் பிளைப்புக்கு தூண்டிலில் மீன் பிடிப்பதும் பொழுது போக்குக்காக மீன் பிடிப்பதும் ஒன்றில்லையே.
இனவாதிகள் சிறுபான்மைத் தமிழினத்தின் மீது செலுத்தும் பிரயோகமும் பொழுது போக்குக்கு மீன்பிடித்தலுக்கு ஒத்ததே

**மோகன் கொக்குவில்**

**மத்திய கல்லூரி நீச்சல் குளம் மீள் திருத்தம் செய்யப்படுமா வியாசரே?**

நீர் நிலையில் வீழ்ந்தவர் உயிரிழப்பு என்ற செய்தி தினசரி செய்தித்தாளில் பிரசுரமாவதை அவதானித்திருப்போம். உயிர் காப்பான நீச்சலை சிறு வயதில் கற்றுக் கொள்ள எம் பிள்ளைகளுக்கு நாம் அனுமதி வழங்குவதில்லை.எம்மிடம் இருக்கும் பெரிய குறையும் இதுவே. ஆனால் வெளி நாட்டில் இரண்டு மூன்று வயது வந்துவிட்டால் பிள்ளைகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுத்துவிடுவார்கள்.
யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் மீண்டும் புதுப்பொலிவு பெற வேண்டும்.
அதனூடே எமது மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கி சாதனை படைக்க வேண்டும். இது நடந்தால் பல இழப்புகளைத் தடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: காஞ்சித் தலைவன்
பாடியவர்: சி.எஸ்.ஜெயராமன்
இயற்றியவர்: மு.கருணாநிதி
இசை: கே.வி. மகாதேவன்



வெல்க நாடு வெல்க நாடு வெல்க
வெல்கவே
வீர சங்க நாதம் கேட்டு செல்க
செல்கவே
படைகள் செல்க செல்கவே

தாயின் ஆணை கேப்பதுக்கு
தலை வணங்கும் தங்கமே
தலை கொடுத்து தாயின்
மானம் காத்திடுவாய் சிங்கமே
சென்று வா வென்று வா

குழலைப் போலை மழலை
பேசும் குழந்தைகளின் முத்தம்
கொஞ்சுகின்ற அஞ்சுகத்தின்
கோல மொழி சத்தம்
உன் குன்று தோளில் புது
பலத்தை வளங்குமடா நித்தம்
சென்று வா வென்று வா

மகிமை கொண்ட மண்ணின்
மீது எதிரிகளின் கால்கள்
மலர் பறிப்பதில்லையடா
வீரர்களின் கைகள்
மாவீரர்களின் கைகள்
சென்று வா வென்று வா

ஓங்கிய வாள் போன்ற வடிவமடா
– அவர்
ஒளி விழிகள் உலகத்தின் படிவமடா
வேங்கைப் புலி மன்னனடா
வீரர்களின் தலைவனடா – அவர்
கட்டளைக்குக் காத்திருக்கும்
வல்லவனே
களம் நோக்கிப் புறப்பட்டா வல்லவனே

# அலுவலகத்தில் இருக்கிற இடம் தெரியாமல் இருக்கலாமா?

**நீங்கள் உங்களுடைய வேலை நேரம் முடிந்து செல்லும் பொழுது நீங்கள் உங்களுடைய பொஸ்ஸை சந்திக்கும் போது நீ அலுவலகத்திற்கு வந்தியா? வேலை செய்தியா? நான் உன்னை கவனிக்கவில்லையேப்பா? என்று, நம்மை நோக்கி ஒரு கேள்வி வந்தால் நாம் எப்படி உணர்வோம்?**

இந்த வசனத்தை கேட்டாலே நமக்கு "அப்பா" படம் தான் ஞாபகத்திற்கு வரும். இருக்கிற இடம் தெரியாம இருந்துட்டு போயிரனும்டா என்ற தந்தை சிறுவனை சொல்லும் வசனங்கள் அதிகமான இடங்களில் உச்சரிக்கப்படும். அதன் பிறகு சமுத்திரக்கனி அந்தச் சிறுவனின் திறமையை வெளிக்கொண்டு வருவதெல்லாம் அது ஒரு தனிக்கதை.

அதே படத்தில் தம்பி ராமையா ஒரு வார்த்தை சொல்லுவார் பார்த்திங்களா, என்ன வார்த்தை அது? இருக்கிற இடம் தெரியாமல் ஏம்பா இருக்கனும் என்பார் நக்கலாக? அது தான் நமக்கு தேவையானது. இருக்கிற இடம் தெரியாமல் இருந்து விட்டு போவது ஒரு சில இடங்களுக்கு வேண்டும் என்றால் நன்றாக இருக்கலாம்.

ஆனால், பெரும்பாலான இடங்களில் நம்முடைய இருப்பை அடையாளம் காண்பிப்பது மிக முக்கியமாகும். இல்லையென்றால் நீங்கள் இருந்ததற்கான தடமே இல்லாமல் போய்விடும். சிட்டிசன் படத்தில் எப்படி, ஒரு கிராமமே வாழ்ந்ததற்கான, தடம் இல்லாமல் போனதோ அதேபோலதான்!

ஆனால், நாம் அவ்வளவு சீரியசாக போக வேண்டாம்.மேட்டருக்கு வருகிறன். நாம் ஒரு அலுவலகத்தில் பணியாற்றிகிறோம்.சரியாக அலுவலக நேரத்திற்கு வருவோம். வேலையும் நன்றாக செய்வோம். ஆனால் யாரிடமும் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருப்போம்.

நம்முடைய boos டம் கூட, காலை வணக்கத்தோடு சரி, அதன் பிறகு, ஈவ்னிங் வேலை முடிந்து போகும் போது தான், அவரை சந்திப்போம்.

உடன் வேலை செய்பவர்களுடன் எதுவும் பேசுவது கிடையாது. கலந்தாலோசிப்பது கிடையாது. அமைதியாக தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பது நல்ல பெயர் எடுப்பது.


இப்படி நீங்கள் இருந்தால் உடனே இந்தப் பழக்கத்தை தூக்கி எறியுங்கள். அதுவும் கண்ணுக்குத் தெரியாத தூரத்திற்கு எறிந்து விடுங்கள்.

முதலில் நீங்கள் அலுவலகத்திற்கு வந்தால் உங்கள் வருகையை உங்கள் Boss க்கு அல்லது முதலாளிக்கு தெரியப்படுத்துங்கள்.

இன்றைக்கு உங்களுக்கான பணி என்ன என்பதை கேளுங்கள், எதை முதலில் செய்ய வேண்டும், எந்த வேலைக்கு முன்னுரிமை (priority) கொடுக்க வேண்டும், எதற்குக் கொடுக்க வேண்டாம் என்பதை எல்லாம் கேட்டு, அன்றைய உங்கள் வேலையை திட்டமிடுங்கள்.

ஒவ்வொரு வேலை முடிந்த பின்னும், சம்பந்தப்பட்ட நபர்களிடம் தெரியப்படுத்துங்கள். அது தொடர்பான ஆலோசனை கேளுங்கள்.

ஒரு சில வேலைகள்



கடினமாக இருந்தால், அது பற்றி சொல்லி, அதை அதற்கு தகுதியான நபர்களிடம் கொடுக்க சொல்லுங்கள்.

எதையும் வெளிப்படையாகப் பேசுங்கள். உங்களுக்கும் உங்கள் பாஸ்ீக்குமான தொடர்பு நகமும் சதையும் போல் இருக்க வேண்டும்.

அப்போது தான் ஒரு அலுவலகத்தில் நீங்கள் இருப்பதற்கான அடையாளம் தெரியும். இல்லையென்றால் நீங்கள் அலுவலகத்திற்கு வந்ததற்கு உண்டான தடயமே இல்லாம்ல் போய் விடும். ஏனென்றால் உங்களுடைய பாஸோ அல்லது முதலாளியோ பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் உங்களை கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டுதான் இருப்பீர்கள்.

அப்போது நீங்கள் உங்களுடைய் வேலை நேரம் முடிந்து செல்லும் பொழுது, நீங்கள் உங்களுடைய பாஸை சந்திக்கும் போது, நீ அலுவலகத்திற்கு வந்தியா? வேலை செய்தியா? நான் உன்னை கவனிக்கவில்லையேப்பா? என்று, நம்மை நோக்கி ஒரு கேள்வி வந்தால் நாம் எப்படி உணர்வோம்?

அதான் எப்பொழுதுமே நீங்கள் பணியாற்றும் அலுவலகத்தில் உள்ள தேவையான நபர்களோடு, சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பிலே இருங்கள். நீங்கள் என்ன பணி செய்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொண்டே இருங்கள்.

அதுதான் உங்களுடைய அலுவலகத்தில் நீங்கள் சிறப்பான பணியை மேற்கொள்வதற்கான ஒரு அடையாளமாகும்.

இருக்கிற இடம் தெரியாமல் இருந்து விட்டுப் போகாமல் இருப்பதை தெரியப்படுத்த முயலுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தளம் மூலம் பெண்கள் வன்கொடுமை சிக்கிய சகோதரர்கள்

பிரிட்டிஷ் - அமெரிக்கரான ஆண்ட்ரீவ் டட்டே நன்கு அறியப்பட்ட டிக்-டாக் பிரபலமாக இருந்து வந்திருக்கிறார். 36 வயதான இவர் 2022 ஆம் ஆண்டு கூகுளில் அதிகம் தேடப்பட்டவர்கள் பட்டியலில் எட்டாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பாலியல் குற்றங்கள் தொடர்பாக இவர் மீது பல சர்ச்சைகள் எழுந்து வந்த நிலையில், இவரும் இவரின் 34 வயது தம்பியும் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து வந்தனர்.

இவர், அதிக இரசிகர்களை ஈர்க்கவும் அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கிலும் கார்களை வேகமாக ஓட்டுவது, இளம்பெண்களுடன் பழகுவது, பெண்களை எப்படி காதலிக்க வைப்பது என்பது போன்று பதிவுகளை உருவாக்கியிருக்கிறார். அத்தோடு தன்னுடைய இரசிகர்கள் பலரின் கணக்குகளையும் இவரே கையாண்டிருக்கிறார் என்றும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் பெண்களைப் பற்றி வெறுக்கத்தக்கதானப் பதிவுகளைப் பகிர்ந்திருக்கிறார். பாலியல் சார்ந்த இவரின் பதிவுகளால் இவரின் கணக்கை டிக்- டாக் முடக்கியிருக்கிறது.

அதுபோல மெட்டா நிறுவனமும் இவரின் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் கணக்குகளை முடக்கியிருக்கிறது. மேலும் 2021 இல் ஒரு பாட்காஸ்டில், பிரிட்டனில் வெப்கேம் வணிகத்தைத் தொடங்கியதாகவும் அதில் 75 பெண்கள் மாதம் 6 இலட்சம் டொலர் சம்பாதிப்பதன் மூலம் உச்சத்தை எட்டியிருப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால், என்ன வேலை என்பதை அவர் குறிப்பிடவில்லை.

கடந்த மாதம் வரை, அவரின் இணையத்தளம் 400 டொலருக்கும் அதிகமான செலவில் ஒரு கோர்ஸை (Course) வழங்கியது. அது உங்களுக்கு அடிபணிந்த, விசுவாசமான மற்றும் அன்பான ஒரு பெண்ணை உருவாக்குவதற்கான ஒவ்வோர் அடியையும் கற்பிப்பதாக உறுதியளித்தது. அதுமட்டுமல்லாமல் மிகவும் திறமையாக "பெண்களை என்னைக் காதலிக்க வைப்பது என் திறமை," என்று அவர் இணையத்தளத்தில் கூறினார்.

இந்த நிலையில், இவர் மீது பெண்களைக் கடத்துவது, பாலியல் உறவு வைத்துக் கொள்வது, அவர்களை அடிமையாக்கிக் கொள்வது எனப் புகார்கள் எழுந்திருக்கின்றன. இந்த விவகாரங்கள் குறித்து பெண் ஒருவர் வாய்திறந்த நிலையில் டட்டே சகோதரர்கள் தற்போது சிக்கலில் சிக்கியிருக்கின்றனர்.

டட்டேவுக்கு அந்தப் பெண் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இன்ஸ்டாகிராமில் அறிமுகமாகியிருக்கிறார். பழக்கம் ஏற்பட்டு விட லண்டனில் ஒருமுறையும் ரோமானியாவில் ஒருமுறையும் நேரில் சந்தித்திருக்கின்றனர். டட்டே அந்தப் பெண்ணிடம் கூறுகையில், "ஒருமுறை நீ என்னுடையவளாக இருந்தால் என்றென்றும் என்னுடையவளாக இருப்பாய் என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்" என்று ஆசை வார்த்தை கூறியிருக்கிறார். ஒருகட்டத்தில் அந்தப் பெண், அவர் தன்னை விரும்புவதாக நம்பியிருக்கிறார். அத்தோடு அவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் திட்டமிட்டிருந்ததாக அந்தப் பெண் கூறுகிறார். பின்னர் டட்டே அந்தப் பெண்ணைக் கடத்தி அவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார்.

இந்த நிலையில், இவரோடு சேர்த்து ஆறு பெண்கள் டட்டேயின் வலையில் சிக்கியிருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. எனினும் அதில் இரண்டு பெண்கள் டட்டே மீதான குற்றச்சாட்டை மறுத்திருக்கின்றனர். "நான் அந்தப் பட்டியலில் ஒருவராக இல்லாத போது நீங்கள் என்னை பாதிக்கப்பட்டவர் என்று பட்டியலிட முடியாது" என்றிருந்தார். ஆனால், மற்ற நான்கு பெண்களும் மௌனமாக இருந்திருக்கின்றனர். எனினும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாட்ஸ்அப் உரையாடல்களின் நகல்கள், ஆதாரங்களின்படி இந்தக் குற்றங்களுக்கு துணை போன இரண்டு பெண்களின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அத்தோடு வருகிற ஜூன் மாதம் வரை நீதிமன்றக் காவலில் வைத்து விசாரிக்கவும் வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.






'நீங்கள் முதலீடு செய்யும் பணம்,' மூன்றே ஆண்டுகளில் 8 முதல் 13 மடங்காகத் திரும்பக் கிடைக்கும்... "இப்படி யாராவது சொன்னால், அவரை மோசடிப் பேர்வழி என்று பொலிஸில் பிடித்துக் கொடுப்போம்.' ஆனால், 'அதானி கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியப் பங்குச் சந்தையில் இதைத்தான் செய்து கொண்டிருந்தார்" என்கிறது அந்த அறிக்கை.

அதானி குழுமத்தைப் பற்றி அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான ஹிண்டன்பர்க் ரிசர்ச் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கை, தேசம் முழுக்கக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதானி குழுமத்தைச் சேர்ந்த பத்து நிறுவனங்களுடைய பங்குகளின் மதிப்பு பெருமளவு சரிந்திருக்கிறது. மூன்றே நாட்களில் 5.5 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பைச் சந்தித்திருக்கிறார். அதானி குழும நிறுவுநர் கௌதம் அதானி. உலகின் மூன்றாவது பணக்காரராக இருந்த அதானி இதனால் ஏழாம் இடத்துக்கு இறங்கியுள்ளார்.

அதானி குழுமம் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டு தமது பங்கு விலைகளை மிக அதிக அளவுக்கு ஏற்றியுள்ளது. மொரீஷியஸ் உள்ளிட்ட பல நாடுகளில் போலியாக கம்பெனிகளை உருவாக்கி, அதன் பங்குகளை விலை ஏற்றியது. அந்த நிறுவனத்தின் உண்மையான மதிப்பிலிருந்து தற்போதைய பங்குகளின் விலை 85% அதிகமாக இருக்கிறது என்கிறது இந்த 106 பக்க ஆய்வறிக்கை. அதானி நிறுவனம் வாங்கியுள்ள அதிகபட்ச கடன் பற்றியும் அது குறித்து கிரெடிட் சைட் நிறுவனம் முன்பு வெளியிட்ட ஆய்வறிக்கையை மேற்கோள்காட்டியும் பல்வேறு கேள்விகளை ஹிண்டன்பர்க் நிறுவனம் எழுப்பியுள்ளது. அதானி குழுமத்துக்கு 88 கேள்விகளையும் எழுப்பியிருக்கிறது அந்த அறிக்கை.

கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் உழைப்பில், பல்வேறு நாடுகளில் தகவல்களைத் திரட்டி இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. அதானி குழுமத்தைப் பற்றி அதானியிடமே இவ்வளவு தகவல்கள் இருக்குமா என மலைக்க வைக்கிறது இந்த அறிக்கை. சிங்கப்பூர், மொரீஷியஸ், சுவிட்சர்லாந்து, இந்தியா எனப் பல நாடுகளில் நேரடியாக அலைந்து தகவல்களைத் திரட்டியிருக்கிறார்கள்.

## சரியும் அதானி சாம்ராஜ்ஜியம்...

ரூ.17,80,000 கோடி மதிப்புள்ள அதானி நிறுவனத்தின் நிகர சொத்து மதிப்பில், முக்கால்வாசிக்கும் மேலாக கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறியது. தங்கள் பங்குகளின் மதிப்பைச் செயற்கையாக ஏற்றிக் காட்டி, விலை உயர்ந்த அந்தப் பங்குகளை அடமானம் வைத்து புதுக்கடன் வாங்கி, இப்படியாக சொத்து மதிப்பை உயர்த்தினார் அதானி. குழுமத்தின் நிகர மதிப்பு உயர்ந்ததே தவிர, வருமானம் உயரவில்லை எனக் குற்றம் சாட்டுகிறது ஹிண்டன்பர்க் அறிக்கை.

அதானி எண்டர்பிறைசஸ் நிறுவனம், தொடர் பங்கு வெளியீடு மூலம் ரூ.20,000 கோடி திரட்டுகிறது. சரியாக அந்த நேரத்தில் இந்த அறிக்கை வெளியாகவே, அந்தப் பங்கு வெளியீட்டுக்குப் போதுமான வரவேற்பு கிடைக்கவில்லை. ரூ 17 பில்லியன் அமெரிக்க டொலர் பணமோசடி தொடர்பாக ஏற்கனவே நான்கு முறை அரசு விசாரணைகளைச் சந்தித்திருக்கிறது அதானி குழுமம். மொரீஷியஸ், கரீபியன் தீவுகள் போன்ற வரிச்சலுகை உள்ள நாடுகளில் நிழலான நிறுவனங்களை ஆரம்பித்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணங்களைப் போலியாக உருவாக்கி, பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பங்குச்சந்தை ஒழுங்குமுறை அமைப்பான செபி என்ன செய்கிறது, வெளிநாட்டு நிழல் நிறுவனங்களின் பணப்பரிவர்த்தனையைக் கண்காணிக்க வேண்டிய அமுலாக்கத் துறை என்ன செய்கிறது என்றெல்லாம் வரிசையாகக் கேள்விகள் எழுகின்றன. பாராளுமன்றத்தில் இந்த அத்தனை கேள்விகளும் பிரதமர் மோடியை நோக்கி எழுப்பப்படும். இந்தியாவின் வளர்ச்சிக்குப் பெருநிறுவனங்கள் தேவைதான். ஆனால் அவை செய்யும் மோசடிகள் எளிய முதலீட்டாளர்களை பாதிக்கும் என்றால், அதைத் தடுக்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உண்டு. அதிகாரத்தில் இருப்பவரின் நண்பராக இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிச்சல் வரக்கூடாது.

இந்தியப் பங்குச்சந்தை இப்படிப்பட்ட மோசடிகளை ஏற்கனவே சந்தித்திருக்கிறது. இதிலிருந்து பங்குச்சந்தை மீண்டு எழுந்துவிடும். ஆனால், அதானி நிறுவனம் என்ன ஆகும்? மில்லியன் டொலர் கேள்வி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டியின்றி பிரதிநிதிகளை தெரிவு செய்க!

தமிழர் தாயகத்திலே நீ
தலை நிமிர்ந்து வாழவே
எம்மில் பிளவுபடாமலே
ஒற்றுமையாய் வாழ்வோம்
எம்மிடையே பிளவுகளை
வளர்த்து நீயும் நிற்பதால்
கைமாறு எதுவுமின்றியே
பிரித்து ஆண்டு வருகிறார்.

பதவியாசை காட்டியே
பக்குவமாய் பேசியே
உதவி பெறக் கதிரைக்கு
போட்டிபோட்டு நிற்கிறார்
மதம் பிடித்த வெறியரால்
மதம் ஒன்றைக் காக்கவே
வதம் செய்து தமிழரைச்
சீரழித்து வருகின்றார்.

சி. சிவானந்தராஜா.

## சுமை தாங்கி

தலையில் இருக்கும் சுமையை இறைக்கிட சுமை தாங்கிகள்
பொருளாதார சுமையால் மக்கள் படும் துன்பங்கள் பலதே
சுமை சுமந்து சோர்ந்திடும் மனங்கள் பாரினிலே
குட்டியைச் சுமந்து தாவிக் குதிக்கும் குரங்குகள்

பல சுமைகளைத் தாங்கிடும் குடும்பங்களின் நிலை காண்
தன் முயற்சியே தனக்கு உதவிடும் கரம் அல்லவா
வீதிக்கு வீதி வியாபாரங்கள் விலைச் சுமைதான் அதிகம்
வாங்கிடவே நிதி நிலை இல்லாத வாழ்வு தான்

நம் சுமைகளை நாம் தான் சுமக்கனுமே
மனச்சுமை கூடினால் மனநலம் குன்றுமே
கருவறையில் பிள்ளை சுமக்கும் தாயின் மனம்
சுமந்து பெற்றிடும் பிள்ளையின் நிலைதான் - என்னவோ

குடும்பச் சுமையை தாங்கிட உறவுகள் உதவிட முடியுமே
சுமைதாங்கிகள் மறைந்தாலும் சுமக்கும் மனங்கள் குறையலே
பிள்ளைகளின் துன்பச் சுமையைத் தாங்க முடியாத பெற்றோர்
கையிலே புத்தகச் சுமை கல்வியோ பரீட்சை - சுமை
மனச் சுமைகள் குறைக்க ஆன்மிக வழிபாடு அவசியமே



எஸ்.பி. தனா, தெல்லிப்பழை.

## வல்லமை



தமிழினி மை
தமிழர் உரிமை
நம் நாட்டில் இன்மை
தமிழர் ஒற்றுமை
நம் தமிழர் மறந்தமை
கட்சிகளின் தலைமை
பிரித்தாளுமை
பெருகிப் போனமை
ஆசையான ஆளுமை
மன்றேர வல்லமை
அறிக்கை விடுமை
தீர்வில்லாமை
இன்றும் முதுமை
தேங்கல் நிலைமை
வேற்றுமை விளைந்தமை
ஒற்றுமை தொலைந்தமை
வாக்குரிமை
விரலுக்கு மை
இறக்குமதியானமை
எம்மை அடகு வைத்தமை
புரிவோமா இவர்தம் வல்லமை

தமிழினியன்-பரந்தாமன், வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 595



## அபிவிருத்தி

காட்டை அழித்து
நாடாக்கினோம்
குளத்தை நிரப்பி
மாளிகை கட்டினோம்
இன்று நடுத்தெருவில்
காஸ் சிலிண்டர்
கரகாட்டம் செய்கின்றோம்.

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

## கொந்தளிப்பு

எரிவாயு விலை ஏறிடும் போதினிலே
எரிவாயு சிலிண்டர்தனை தலையில் தூக்கி
கொள்ளையடிக்கும் கொடூரருக்கெதிராக
கொடி பிடித்தே திரண்டிடும் மக்களின் கூட்டம்
சமையல் எரிவாயு இன்றியே
சமைக்கத் தவிக்கும் அரச பணியாளர்
விறகு இன்றி மண்ணெண்ணெயும் இன்றி
விருப்புடன் உணவு சமைத்துச் சாப்பிட
வழியுமின்றி வாடிக் கொதிக்கும்
மக்களின் கொந்தளிப்பு

ஆ.செல்வி,
திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 596



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அதிகாரத் திமிரால்

சுகமான சுமைகளாயிரும்
குடும்பச் சுமைகளென்றும்
பொருளாதாரச் சுமைகளே இன்று
உடலையும் உள்ளத்தையும்
அழுத்தி மூச்சுமுட்டும் வேதனை
ஊட்டச்சத்தில்லா உணவைக் கூட
பசி தீர குடும்பத்தாருக்கு
வழங்க முடியாத் துயரம்
இது அதிகார ஆணவத்தால்
விளைந்த கொடுமையன்றோ

சி.இ. அன்புதுரை,
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## ஊழித் தாண்டவம்

வயிற்றுப் பசி உயிரை வாட்ட
ஒருவேளை உணவுக்காய்
வாழ்வே வரிசையாய்
வாழ்வதற்கு வழி இன்றி
ஆதரிப்பார் யாரும் இன்றி
வலி சுமக்கும் ஏதிலியாய்
செய்வதற்கு தொழில் இன்றி
வறுமையின் ஊழித்தாண்டவம்

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## மாடாய் உழைப்பதெல்லாம்

ஏ9 வீதியிலே எந்தத் தனியார்
உந்துருளியும் ஓடாத போது
உரிமம் பெற்று ஊறியவர்
எரிவாயு இல்லாத மக்களுக்கிப்போ
ஒடிஒடி கப்பல் வழித் தடத்திற்கும்
மாடாய் உழைத்தால் மந்திரியர்க்கு
மாமூல் தாமே மக்களுக்கு மதில் மேல்
மாயை காட்டி மறை வாராமோ...

சாமிபுத்திரன்,
கர்ணந்தோட்டம்.

## மாற்றம்

ஒரே இனம்; ஒரே மதம்;
ஒரே நாடு; இது சிங்கள தேசம்...
அன்றைய கோஷம்
வயிற்றுக்குச் சோறு; இடுப்புக்குத் துண்டு
குழந்தைக்குப் பால்; அடுப்புக்கு காஸ்...
இன்றைய கோஷம்

பிரமன்,
கொக்குவில்.

## என்ன செய்வோம்?

எரிக்க விறகும் இல்லை
எரிவாயும் கிடைக்கவில்லை
எரியும் வயிற்றுக்கு
என்ன செய்வோம்?
எம் நாட்டிலே ஏதிலிகளாய்
ஏங்கித் தவிக்கின்றோம்

பிரகவி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 48

## எதிர்பாராத விபரீதம்

அவளை மட்டுமல்ல அந்தக் கூட்டத்தையும் பேரச்சம் பீடித்திருந்தது சில விநாடிகளுக்கு. எந்த விபரீதம் அந்த வருடம் நடக்காதென்று சிறிது நேரத்துக்கு முன்பு பலவர்மன் உட்படச் சகலரும் நினைத்தார்களோ, எந்த விபரீதத்தை தடுத்து விட்டதாக இளையபல்லவனின் சகாக்களும் கருதினார்களோ, அந்த விபரீதம் எப்படியும் நடந்தே தீருமென்ற நினைப்பும் அதற்கு முதல் பலி இளையபல்லவனாகி விடப் போகிறானே என்ற அச்சமும், வில்வலனின் தோற்றத்தாலும் பேச்சாலும் கூட்டத்தாரிடையே துளிர்விடவே எங்கும் மௌனம் நிலவி நின்றது.

ஆயிரக்கணக்கான கண்கள் மேடைமீது நிலைத்திருந்தன. மேடை விளக்குகளின் தீச்சுடர்கள்கூடக் கண் சிமிட்டாமல் அந்த விபரீதத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

கோட்டைத் தலைவனும் கூட்டமும் நடன கோஷ்டியும் அனைவருமே நிலைகுலைந்துவிட்ட அந்தச் சமயத்தில் இளையபல்லவன் மட்டும் சிறிதுகூட நிதானத்தை இழக்காமலும், இதழ்களில் இளநகையுடனும் வில்வலனைத் தன் கூரிய கண்களால் நோக்கினான்.

அங்கு சூழ்ந்திருந்த மௌனத்தையும் அவனே மெள்ளக் கலைத்து. "மன்னிக்க வேண்டும். நடனமளித்த மயக்கத்தில் உங்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மறந்துவிட்டேன்."

என்று வில்வலனை நோக்கிக் கூறியதன்றி. "நான் இங்கு நடன நிகழ்ச்சிக்கு வந்தேன்.

இந்தப் புது நிகழ்ச்சியை எதிர்பார்க்காததால் வாளை எடுத்து வரவில்லை. ஒரு நிமிடம் அவகாசம் கொடுங்கள்." என்று பணிவுடன் சொல்லிக் கொண்டே அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை வில்வலன் ஊகிக்குமுன்பே வில்வலன் கைவாளைத் தன் இடது கையால் ஒதுக்கிவிட்டு அவனைத் தாண்டி மணலில் குதித்து கண்ணிமைக்கும் நேரத்தில் கண்டியத்தேவனை அணுகி அவன் இடையில் இருந்த வாளை உருவிக் கையிலெடுத்துக் கொண்டான்.

இளையபல்லவனின் கூர்மையான கண்கள் நோக்கிய போதே இந்தப் பார்வையின் காந்த சக்தியில் சிக்கிய வில்வலனின் பயங்கரக் கண்கள் சற்று சலனப்பட்டதாலும், அந்தச் சலனம் தீருமுன்பாகவே இளையபல்லவன் பேச்சுக் கொடுத்துக்கொண்டு சாதாரணத் தடையைத் தள்ளுவது போல தன் வாளை ஒதுக்கித் தள்ளிவிட்டு மணலில் குதித்து. தான் திரும்புமுன்பாகவே வேறொருவன் வாளைக் கையில் பிடித்துக் கொண்டதைக் கண்டதாலும். அப்படி ஓர் அசாதாரணத் துணிவையும் துரிதத்தையும் அவன் கனவிலும் அன்றுவரை காணாததாலும் சில விநாடிகள் அசந்தே போனான்.

அந்த அசதி தீருவதற்குள் பிரமிப்பிலிருந்து விடுபட்ட கூட்டமும் அவர்களை நோக்கிக் கவியத் தொடங்கவே பெரும் சீற்றத்துக்குள்ளான வில்லவன். "நெருங்காதீர்கள் யார் நெருங்கினாலும் பிணமாகிவிடுவீர்கள்," என்று கொஞ்ச நஞ்சமிருந்த நிதானத்தையும் காற்றில் பறக்க விட்டுப் பெரும் குரலில் கூவினான். வாளைப் பிடித்திருந்த தன் கையை முழு நீளத்துக்கு நீட்டிச் சக்கர வட்டமாகச் சுழன்று. கவிந்து வந்த கூட்டத்தைச் சற்று எட்டவே நிற்க வைத்தான். பிறகு வாளை உருவிக்கொண்டு நின்ற இளையபல்லவன் மீது பாயவும் முற்பட்டான்.

வில்வலனின் நிதானமிழந்த நிலையையும் அவசரத்தையும் கவனித்த இளையபல்லவன் தன் இடது கையால் அவனைப் பொறுக்கும்படி சைகை காட்டியதன்றி. "அமைதியாயிருங்கள். தள்ளி நில்லுங்கள்" என்று கூட்டத்தையும் எச்சரித்து விட்டு. வலது கையிலிருந்து வாளைப் பிடித்த வண்ணமே தனது மேலங்கியைக் கழற்றி அமீரிடம் கொடுத்தான். (தொடரும்)



# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு - பகுதி 2

### தென் ஆபிரிக்காவின் டேபிள் மவுண்டன்

'டேபிள் மவுண்டன்' என்றால் மேசைமலைகள் என்று பொருள். இம்மலைத் தொடரின் உச்சிகள் மேசையைப் போலத் தோற்றமளிப்பதால் இதற்கு இப்பெயர். தென் ஆபிரிக்காவில் கேப்டவுன் நகரத்திற்கு தெற்குமுனைப் பகுதியில் இம்மலைகள் வியாபித்துள்ளன. வழக்கமாக மலை உச்சிப் பகுதி கூர்மையாக இருக்கும்.

ஆனால் சுமார் இரண்டு மைல் நீளத்துக்கு இம்மலைத் தொடரின் உச்சி சமதளமாகக் காணப்படுகிறது. உலகில் உள்ள மலைகளில் இது தான் பழமையானது என்கிறார்கள். சுமார் 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக இவை உருவாகி இருக்கலாம் என கணிக்கப்படுகிறது. இந்த மலை உச்சி சமதளப் படுக்கைக் கோடு கார்ஜ் எனப்படும் பெரிய வெடிப்பின் மூலம் வெட்டுப்பட்டிருக்கலாம்.

இந்த மலை உச்சியிலிருந்து பார்த்தால் கேப்டவுன் நகரை முழுமையாகக் கண்டு களிக்கலாம். இதனால் தானே என்னவோ கேப்டவுன் நகருக்கென உருவாக்கப்பட்ட அதிகாரபூர்வ கொடியில் இந்த மேசை மலைதன் காட்சியளிக்கிறது. மேசை மலைகளின் முந்தைய பெயர் ஹொவ்ரிக்வாகோ என்பதாகும். ஆபிரிக்க மொழியில் இதற்கு கடல் மேல் மலை என்று பொருள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இங்கு மலையேறி வந்த பிரெஞ்சு வானவியல் அறிஞர் ஒருவர் இரவில் அந்த மலையின் உச்சி சமதளப் பகுதியில் நட்சத்திரங்களைப் பார்த்த போது அவை அமர்ந்து விருந்து உண்பது போல காட்சியளித்ததாம்.

அந்த காட்சியில் தன்னை மறந்து 'மென்சா' என அழைத்தாராம். மென்சா என்னும் சொல் லத்தீன் மொழியில் புனிதமான மேசையை குறிக்கின்றதாம். மெசா என்றால் ஸ்பானிஷ் மொழியில் மேசை என்பதைக் குறிக்குமாம். அன்று முதல் இது மேசை மலைகள் ஆனது. மேசை மலை என்பது மலைத் தொடரின் ஒரு பகுதியே. இம்மலைத் தொடரின் தென்கோடி நன்னம்பிக்கை முனை. நன்னம்பிக்கை முனையிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 3567 அடிகள் வரை உயரமானது இம்மலை. கிழக்கே டெவில்ஸ் பீக் என்ற முகடும், தெற்கே லைன்ஸ் ஹெட் என்ற முடியும் உள்ளன. இவற்றின் உயரம் முறையே 3270-2178 அடிகள். டேபிள் மவுண்டன், மணல்குன்றுகளாலும் "காம்பேக்ட்ராக்" என்னும் உறுதியான பாறையாலும் உருவானது. குவார்ட்ஸ் எனப்படும் படிக்கல் ஏராளம். இதில் பொன்னும் கலந்திருக்கும். மலையின் மேற்குப் பகுதியில் உலகின் உயர்ரக கிரானைட் கற்கள் கிடைக்கின்றன.

டேபிள் மலை மீது சென்று பார்த்துக்களிக்க இப்போது கேபிள் கார் வசதி இருக்கிறது. தற்சமயம் இந்த கேபிள் கார் ஒன்றில் 65 பேர் வரை பயணிக்க முடியும். வருடத்துக்கு எட்டு லட்சம் பேர் இன்றைக்கு சுற்றுலாப் பயணிகளாக மலைக்கு வந்து செல்கிறார்கள். 17 ஆம் நூற்றாண்டில் ஜான் வான் ரீபீக் என்னும் டச்சுக் காரார் தான் மலை அடிவாரத்தில் முதன் முதலில் குடியேற்ற எண்ணத்துடன் காலடி வைத்த வெள்ளையர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

328

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி?

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அத்திபாரம் அவன் கருப்பையில் இருக்கும் போது இடப்படுகிறது. தாயின் மனமகிழ்ச்சி,போதுமான உடற் பயிற்சி, ஆரோக்கிய உணவுகள் சிசுவின் ஆரம்ப ஆரோக்கிய வளர்ச்சிக்கு அடிநாதமாய் திகழ் கின்றன. அந்தச் சின்னஞ்சிறு மனிதன் இந்தப் பூவுலகில் பிறப் பெடுக்கும் பொழுது பல்வேறு பட்ட சவால்களை எதிர்கொள் கிறான்.

அந்தச் சவால்களை வெற்றி கொள்ளப் போராடுவது தான் சுக வாழ்வுக்கான தேவையாகி நிற்கிறது.

உலகம் இயந்திரமயமாகி சுதந்திரங்கள் பறி போய் பூமிக் காற்றுப் புகையாகி, புழுதி மண் டலமாகி, ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து, பூமியைக் கதிர்வீச்சுக்கள் தாக்க, இலட் சக்கணக்கான பச்சை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு,பாவப்பட்ட மண் பாலைவனமாகிக் கொண் டிருக்கிறது.

இயற்கையான இனிய கனி களுக்குக் கூட இரசாயனம் தெளிக்கப்பட்டுப் பகட்டான நச்சுக் கனிகள் ஆக்கப்பட பொலித் தீன்கள் எம்மை ஆக்கிரமிக்க மனிதன் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச் சவால்களை எதிர்கொள்ள சுற் றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு பரந்துபட்ட அள வில் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

எமது சிறார்களுக்கு சுகம் சம்பந்தமான அறிவைச் சிறு வயதிலேயே புகட்டுவோம். உடற்பயிற்சி, ஆரோக்கிய உணவுமுறை, உடல் நிறை பேணுதல், ஆரோக்கிய வாழ் க்கை முறை, சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை அவர்களின் மனது ஏற்றுக் கொள்ளும் வகையில் சொல்லிக் கொடுப்போம்.

ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு ஆரோக்கியமானவன், சுக தேகி என்று எண்ணிக் கொள்வது அவனைப் பல நோய் நிலைகளி லிருந்து காக்கும்.

சிறுசிறு உடல் நலக்குறை வுகளும் நோய்நிலைகளும் அவ் வப் பொழுது ஏற்படுவது



இயற்கை. அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்து தொடர்ந்து நாம் ஆரோக்கியமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை அனுகூலமாக அமையும்.

கடுமையான நோய்நிலை களிலே பெரும்பாலானவை மனி தனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின் றன. எனவே நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறி வதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும்.

இயந்திரமயமாகிவிட்ட இந்த உலகை நாம் புத்திசாதூரியமாக சாதகமாகப் பயன்படுத்த கற்றுக் கொள்வோம். விஞ்ஞான வளர்ச் சியினால் மனிதன் சராசரியாக வாழும் வயதெல்லை அதிகரித் திருக்கிறது. கற்கை, கற்பித்தல் செயற்பாடுகளில் புரட்சிகர மாற் றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினால் உலகம் ஒரு குடும்பம் போல நெருங்கி வந்திருக்கின்றது. இந்த நல்ல மாற்றங்களை எமது சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்வோம். மனச்சோர்வு, உலக சவால்களை எதிர்கொள் வதில் ஏற்படும் கஷ்டநிலை என் பன பல சுகாதாரப் பிரச்சினை களை ஏற்படுத்தி நிற்கின்றன. இவை தற்கொலைகளில் கூட முடிகின்றன. தற்கொலை என் பது வாழ்ந்தது போதும் என்ற எண்ணமே அன்றி இறப்பதற் கான விருப்பம் அல்ல. அவ்வா றான எண்ணம்தற்காலிகமானது என்பது உணரப்படவில்லை.

தற்கொலையில் ஈடுபடுபவ ரில் பலர் ஒரு கண நேரத்தில் இவ்வாறான முடிவை எடுத்து விட்டு இறுதியில் தாம் காப் பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் மருத்துவ சேவை களை நாடுகின்றனர்.

இவ்வாறு அதிகரித்துவரும் தற்கொலை முயற்சிகளை தடு த்து நிறுத்த சமூக மட்டத்திலே பல்வேறுபட்ட தரப்புகளின் கூட்டு முயற்சி அவசியமாகின்றது.

உலகிலே உடற்பருமன் அதி கரிப்பால் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் இறக்கின்றனர் எனும் அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது. உடல் நிறை பராமரிப்பு உயிர்காக்கும் என்ற தகவல் ஒவ்வொருவரை யும் சென்றடைய வேண்டும்.

மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், மருந்து, சுவா சக்காற்று, நிழல், குளிர்ச்சி, மன அமைதி, மழை, நீர், எரி பொருள், மகிழ்ச்சி என அனைத்தையுமே தொடர்ந்து அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் தாவரங்களை யும் மரங்களையும் நட்டு வளர் ப்பதில் பெருமிதம் கொள் வோம்.

மனதிற்கு பிடித்த நல்ல காரி யங்களில் மனதை செலுத்து வோம். மனதையும் உடலை யும் சுற்றாடலையும் தூய்மை யாகப் பேணி சுகம் பெறு வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின் சடலம் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - மன்னார் வீதியின் 2 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள உடையார் குளத்திலிருந்து ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டதாக பொலிஸார் நேற்று தெரிவித்துள்ள னர்.

இவ்வாறு சடலமாக மீட்கபட்ட நபர் 49 வயதுடைய மொஹமட் சுஹைல் என்ற 5 பிள்ளைகளின் தந்தை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து வெளியில் சென்று. காணாமல்போன நிலையில் வீட்டார் தேடியுள்ளனர்.

இதன்போது குறித்த நபர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(4)


## தவறி விட்டது

அரியாலைக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் சாம்பசிவம் சுபாகரன் (670432696V) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதி பத்திரம் என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல:-

**077 078 0623**

**074 065 6153**

சாம்பசிவம் சுபாகரன்
பாரதி வீதி, கோண்டாவில்.

(14503)



## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

## தைப்பூச உலகப் பெருமஞ்சத் திருவிழா





**காலம்: 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு** இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து பால்குடப் பவனி ஆரம்பம்.

**காலை 9.30 மணிக்கு** மாபெரும் பொங்கல் ஆரம்பித்து **2.30 மணிவரை** நடைபெறும். **மாலை 6 மணிக்கு** நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப் பெரு மஞ்சத்தில் ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் நிகழ்வும் தமிழரின் பாரம்பரியமான கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

தொலைவிலிருந்து வரும் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயமுன்றலில் பெற்றுக்கொள்ளலாம்.

**முருகன் அடியவர்கள் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்க வாரீர்...**

முருகன் அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(14496)

விளம்பர அனுசரணை

TELESOON
Making Great Thinks Possible

Hotline 075 757 5715

Head office, No.259C, Power House Road, Jaffna
No.32, K.K.S Road, Chunnakam
1 st Floor, Cargills Square, Jaffna
Signal Junction, Station Road,Chunnakam

071 190 7466 | Telesoon



## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

### வருடாந்த பொதுக்கூட்டமும் வேட்புமனுத் தாக்கலும்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

**காலம் : 05.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : காலை 9.00 மணி**
**இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்**
**தலைமை : திரு.பொ.கமலநாதன்**

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 10.02.2028 ஆம் திகதிக்கு முன்னராக தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

**தபால் முகவரி:**
செயலாளர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

### 2023/2024 காலப் பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்காக வேட்புமனுத் தாக்கல் செய்தல்

- சங்க அங்கத்தவர்கள் மாத்திரம் வேட்புமனுத் தாக்கல் செய்யலாம்.
- 2023/2024 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவானது சங்க அமைப்பு திட்ட விதி உப பிரிவு 6.2 இன் பிரகாரம் நிர்வாக சபை தெரிவு தேர்தல் மூலம் நடைபெறவுள்ளதால் சங்க அமைப்புத் திட்ட விதி உப பிரிவு 6.1 இல உள்ளவாறான பதவிகள் மற்றும் யாப்பு விதி உப பிரிவு 15.1 இன் பதவி அனைத்திற்கும் போட்டியிட விரும்பும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தாம் போட்டியிட விரும்பும் பதவிகளுக்கான வேட்புமனுவை பாடசாலை தென்பகுதி அலுவலகத்தில் 06.02.2023 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 14.02.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையிலான கிழமை நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையிலான காலப்பகுதியில் பெற்று பூரணப்படுத்திய வேட்புமனுவை 15.02.2023 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னராக நேரடியாக பாடசாலையில் தேர்தல் குழுவால் நியமிக்கப் படும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.
- தங்கள் வேட்புமனுவை கையளித்தமைக்காக வழங்கப்படும் பொறுப்பேற்றல் கடிதத்தினை தேர்தல் குழுவால் நியமிக்கப்படும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு**

**காலம் : 05.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : பி.ப 1.00 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை**
**இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி, பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்**

**கா.சசிகரன் - செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(14493)



## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: சூரி. செவ் 6 இல்<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/10408 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: சூரி 3 செவ் 5 இல்<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்:வைத்தியர் இறுதி ஆண்டு<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்<br>தொ.இ: G/11498 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா:28 ¾ சூரி 2 செவ் 3 இல்<br>உயரம் :5' 6"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10409 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 67 சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/11503 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா:39 ¾ சூரி 5 செவ் 9 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில் பட்டதாரி வியாபாரம் (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/10415 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 44 சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BA ஆசிரியர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர். கணக்காளர்<br>தொ.இ: G/11512 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்; மிருகசீரிடம் 4<br>கி.பா: சூரி. செவ் 6 இல்<br>உயரம்:6' 1"<br>தகைமை/தொழில்:பட்டதாரி முகாமையாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10416 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:24 சூரி . செவ் 9 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: தொழில் நுட்ப உத்தி யோகத்தர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (கனடா. லண்டன்)<br>தொ.இ: G/11516 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்திற்கு எதிராக மன்னாரில் கரிநாள் போராட்டம்

(மன்னார்)

**இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று மன்னார் மாவட்டத்தில் சுதந்திர தினத்திற்கு எதிரான கரிநாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது**



குறித்த போராட்டத்தில் அருட் தந்தையர்கள், இளைஞர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் உணர்வாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு நிறக் கொடிகளை ஏந்தியவாறு கைகளை சங்கிலியால் கட்டி ,வாய் மற்றும் மூக்குகளை கறுப்புத் துணிகளால் மூடியபடி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சுதந்திர தினத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர்

போராட்டத்தின் இறுதியில் கைகளில் பதாகைகளையும் கறுப்புக் கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் மன்னார் பேருந்து நிலைய வளாகம் முழுவதும் ஊர்வலமாக சென்றமை குறிப்பிடத்தக்கது.(4-285)



நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்றுக் காலை இடம்பெற்றது .இப்புதிர் விழா 289 ஆவது ஆண்டாக இந்த வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

(படங்கள்: சிவசாந்தன், கஜிந்தன்)

# சுதந்திர தினத்திற்கு ஆதரவாக வவுனியாவில் வாகனப்பேரணி

(வவுனியா)

சுதந்திர தினத்திற்கு ஆதரவு தெரிவித்து வன்னி மக்கள் ஒன்றியத்தினால் வாகனப் பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெருமளவான பகுதிகளில் இலங்கையில் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் புறக்கணிக்கப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கறுப்புக் கொடிகளையும் கட்டி தமது எதிர்ப்பினை தெரிவித்து வந்த நிலையிலேயே சுதந்திர தினத்திற்கு ஆதரவாக இவ் வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.



அனைத்து வாகனங்களிலும் தேசியக்கொடிகள் கட்டப்பட்டு வாகனப்பேரணி வவுனியா நகரை வலம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-299)

# வயல்வெளி வீதி ஊடாக கனரக வாகனங்களை செலுத்த வேண்டாம்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வயல் வெளி வீதியினை கன ரக வாகனங்கள் பயன்படுத்த வேண்டாம் என விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

வன்னேரிக்குளம் முருகன் கோவிலில் இருந்து ஜெயபுரம் செல்லும் வீதி பல்லவராயன் கட்டு பாலாவி வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் தொடங்கப்பட்ட இவ்வேலைத் திட்டம் கடந்த இரு ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வன்னேரிக்குளம் குளத்தின் கீழ் நீர்ப்பாசன வாய்க்கால்கள் அண்மையில் புனரமைக்கப்பட்ட நிலையில் 9 ஆம் வாய்க்கால் வழியாக 6ம், 7ம், 8ம் வாய்க்கால் வீதிகள் தற்போது நல்ல நிலையில் காணப்படும் நிலையில் குறித்த வீதியினை டிப்பர்கள், பேருந்துகள் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் தடை விதித்து உள்ளனர்.

காரணம், குறித்த வீதி பயன்படுத்தப்பட்டால் விரைவாக சேதமடையும். குறிப்பாக டிப்பர்கள், பேருந்துகள், பாரவூர்திகள் குறித்த வீதியினை களவாகப் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குறித்த வயல் வீதி ஊடாக கனரக வாகனங்கள் பயணித்தால் அதனைத் தடுத்து நிறுத்துமாறும் விவசாயிகளுக்கு வன்னேரிக்குளம் கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (4-350)

# சத்ய சாய் சேவா நிலையம் கிளிநொச்சியில் இன்று திறப்பு

(நெளுக்குளம்)

இலங்கை சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தினால் புதிதாக நிர்மானிக்கப்பட்ட சத்ய சாய் சேவா நிலையம் (சாயி சுந்தரம்) இன்று ஞாயிற்றுக் கிழமை வைபவ ரீதியாக கிளிநொச்சி ஜெயந்தி நகரில் வடமத்திய பிராந்தியம் ஸ்ரீ சத்ய சாய் சர்வதேச நிறுவனத்தின் தலைவர் அ.தவீசன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் சத்ய சாயி சர்வதேச நிறுவனம் ஐந்து பிராந்தியங்களில் அதாவது வடபிராந்தியம், வடமத்திய பிராந்தியம், மத்திய பிராந்தியம், தெற்கு மற்றும் மேற்கு பிராந்தியங்களில் தனது சேவைகளை ஆற்றி வருகின்றது.கடந்த வருடம் கட்டடத்திற்கான அடிக்கல் வைக்கப்பட்டது. அதன் பின் படிப்படியாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. குறித்த கட்டடம் புதுப்பொலிவுடன் இன்று திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-299)

# வவுனியா சிறையிலிருந்து பெண் உட்பட ஐவர் விடுதலை

(நெளுக்குளம்)

நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெண் கைதி உட்பட ஐவர் விடுவிக்கப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் பிரதான சிறைச்சாலை சிறைக்காவலர் சந்திரசிறி மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து ஒரு பெண் கைதி உட்பட ஐவர் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். (4-299)

# முல்லையில் 7 குளங்கள் வான் பாய்கின்றன



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு குளங்கள் வான் பாய்ந்து கொண்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சி.விகிர்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக முத்தையன் கட்டுகுளம், தண்ணி முறிப்புக்குளம் என்பன வான் பாயத் தொடங்கிய நிலையில் இரு குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், பழையமுறி கண்டிக்குளம், தேறாங்கண்டல் குளம், ஐயன்கன்குளம் ஆகிய குளங்களும் வான் பாய்ந்து கொண்டிருப்பதாக தெரிவித்தார். (4-350)

# காட்டுயானைகள் வருகையால் வாழ்வாதார பயிர்கள் அழிவு

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கனகரட்ணபுரம் கிராமத்தில் யானைகளினால் பயிர் அழிவுகள் ஏற்பட்டு வருவதாக கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

127 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் விவசாயமே முதன்மை தொழிலாக காணப்படுகின்றது. இரவு வேளைகளில் கிராமத்திற்குள் நுழையும் யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் தென்னை, வாழை உட்பட அனைத்துப் பயிர்களையும் அழித்து வருவதாகவும் யானை அழிவுகள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலாளருக்கு யானையினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கிராம மக்களினால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் மாலை 4 மணிக்கு பின்னர் யானைகள் வீதிக்கு வருவதாகவும் இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் அச்சம் கொண்டுள்ளதாகவும் யானைகளை தூர காடுகளுக்குள் விரட்டி விடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுக் கொடுப்பது போன்றது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் கூறியதன் சூக்குமம் என்ன?

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்பாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உறுதிமொழி காற்றோடு கலந்து விட்டது.

சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளு மன்றத்தில் வைத்துக் கூறியபோது, இது எங்ஙனம் சாத்தியமாகும் என்ற கேள்வி எழுந்தது.

தவிர, அரசியல்வாதிகள் சிலர் ஜனாதிபதி ரணில் பொய்யுரைக்கிறார் தமிழ் மக்களை ஏமாற்றுகிறார் எனப் பகிரங்கமாகக் கூறியி ருந்தனர்.

இதில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண முக் கியமானவர்.

உண்மையில் 75ஆவது சுதந்திர தினத் துக்கு முன்னதாக தமிழ் மக்களின் பிரச் சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதை நடை முறைப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அவர் அதைச் செய்யவில்லை எனும்போது, எதற்காக அப்படியொரு வாக் குறுதியை ஜனாதிபதி ரணில் வழங்கினார் என ஆராய்வது கட்டாயமானதாகும்.

இங்குதான் 13ஆவது திருத்தச் சட்டமூலம் வெளிப்படுகிறது.

ஆம், இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வு என்ற விடயம் எமது அண்டை நாடான இந்தியாவுடன் தொடர்புபட்டது.

இந்தியாவை மீறி எந்த நாடும் இலங் கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தலை யிடமாட்டா.

ஆக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங் கள் என்பது இந்தியாவின் அழுத்தமாக இருக்கிறது.

அதிலும் ஏலவே உள்ள இலங்கை – இந் திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அமையப்பெற்ற 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவதே இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்த அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவது என்பதை கூறுவதற்குப் பதிலாக, இனப் பிரச்சினைக் குத் தீர்வு காணப்படும் என்று கூறுவது என ஜனாதிபதி ரணில் திட்டமிட்டார்.

இதனைத் தொடர்ந்து இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை இலங்கை அரசாங்கம் அமுல் படுத்த வேண்டும் என, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்து அத்தகவலை வெளிப்படுத்தினார்.

அதேநேரம் இது தொடர்பில் சிங்கள தமிழ்த் தலைவர்களையும் அவர் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறியிருந்தார்.

எனினும் 13ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தக்கூடாது என பௌத்த பீடாதி பதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் கூட்டாகக் கேட்டுள்ளனர்.

இதிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பௌத்த பீடங்களின் நிலைப்பாட்டை இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதுடன் ஜனாதிபதி என்ற வகையில் நான் விரும்பி னாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கு பௌத்த பிக்குகளும் பேரினவாத அரசியல்வாதிகளும் ஒருபோதும் அனு மதிக்க மாட்டார்கள்.

இந்தத் தகவலை வெளிக்கிளப்பிய ஜனாதி பதி ரணில், வெளிநாடுகளின் அழுத்தத்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துள்ளார்.

இதுவே அவர் வழங்கிய வாக்குறுதியின் சூக்குமம் என்பது உணர்தற்குரியது.

# 13ஐ அமுல்படுத்துவதாகக் கூறி ஜனாதிபதி மக்களை ஏமாற்றுகிறார்

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவதாக ஜனாதி பதி ரணில் விக்கிரம சிங்க வழங்கிய உறுதி மொழி பொதுமக்களை ஏமாற்றும் தந்திரம் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தி யுள்ளார்.

எரியும் பிரச்சினை கள் மற்றும் அவற்றுக்கு எதிரான போராட்டங் களை முன்னெடுப்பதில் இருந்து மக்களின் கவ னத்தை திசை திருப்ப ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க முயற்சித்து வருவதாக அவர் தெரி வித்துள்ளார்.

நாடுமுழுவதும் உள்ள மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற் றும் பொருளாதார நெருக் கடி குறித்து பேசிக் கொண்டிருந்தனர்.

எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் 13ஆம் திருத் தச்சட்டம் தொடர்பான இந்த உரையாடலை ஆரம்பித்தார்.

எனவே அவரின் இனவாதச் சூழ்ச்சி களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று மக் களிடம் கேட்டுக் கொள்வதாக ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது தேர்தல் பணிகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டதாகவும், தேர்தலை நிறுத்தினால் பண விரயமே ஏற்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## ஜனாதிபதியின் கொள்கை உரை தொடர்பான விவாதம்

### 9, 10ஆம் திகதிகளில் இடம்பெறும்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் 8ஆம் திகதி ஆற்றப்படவுள்ள அர சாங்கத்தின் கொள்கை உரை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 9 மற்றும் 10ஆம் திகதி களில் இடம்பெறவுள் ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற தொடர் பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர் வரும் 9ஆம் திகதி முற் பகல் 9.30க்கு பாராளு மன்றம் கூடி, கடந்த பாராளுமன்ற அமர்வில் முன்வைக்கப்பட்ட 51 யோசனைகளுக்கும் அனுமதி பெற்றுக்கொள் ளப்படவுள்ளதாக பாராளு மன்ற தொடர்பாடல் திணைக்களம் வெளி யிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-7)

## புதிய மதுவரிச் சட்டமூலத்தை தயாரிக்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

புதிய மதுவரிச் சட்ட மூலத்தை தயாரிப்பதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களத் தின் மேலதிக ஆணை யாளர் நாயகமும் ஊட கப் பேச்சாளருமான கபில குமாரசிறி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மதுவரி கட்டளைச் சட்டத்தை திருத்துவதற் கான பணிப்புரை மது வரித் திணைக்களத் துக்கு கிடைக்கப்பெற் றுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் னர் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பாதீட்டுக்கு அமைய இந்தப்பணிப்புரை விடுக் கப்பட்டுள்ளது.

இதன்படி, மதுவரி கட்டளைச் சட்டத்திற்கு பதிலாக மதுவரிச் சட் டத்தை தயாரிப்பதற் கான செயற்பாடுகள்முன் னெடுக்கப்படுவதாக மதுவரித் திணைக்களத் தின் மேலதிக ஆணை யாளர் நாயகமும் ஊட கப் பேச்சாளருமான கபில குமாரசிறி தெரி வித்துள்ளார். (ம-7)

## பேஸ்புக் களியாட்டத்தில் யுவதி துஷ்பிரயோகம்

(கொழும்பு)

பாணந்துறை சுற் றுலா ஹோட்டலில் இடம் பெற்ற முகநூல் விருந் தில் கலந்து கொண்ட 10 பெண்கள் உட்பட 41 பேர் கைது செய்யப்பட்ட தாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரி வித்தனர்.

ஹபரதுடுவ பிரதேசத் தில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற விருந் தினை சோதனையிட்ட பொலிஸார், சந்தேக நபர்களை கஞ்சா, போதைப் பொருள் மற் றும் மதுபானங்களுடன் கைது செய்தனர்.

ஹோட்டலின் உரிமை யாளர் மற்றும் அவரது மனைவியும் பொலிஸா ரால் கைது செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

விருந்தின்போது குடி போதையில் இருந்த யுவதியை, இரண்டு இளைஞர்கள் பாலியல் வன் கொடுமை செய் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் ஒரு குழுவினரை பாணந் துறை நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்த வுள்ளதாகவும் ஏனைய சந்தேகநபர்களின் பெற் றோர்கள் அழைக்கப் பட்டு, ஒப்படைக்க வுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## நாவலர் விழா

(யாழ்ப்பாணம்)

நாவலர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு நாவலர் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி க்கு சுதுமலை வடக்கு நாவலர் சனசமூக நிலை யத்தில் சனசமூக நிலை யத் தலைவர் சி.பவன் தலைமையில் இடம்பெற வுள்ளது. (4)

## முதலீடுகள் தொடர்பில் ஜப்பானுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜ யம் செய்துள்ள ஜப் பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டேக்கி ஷன்சுகேவுடன் வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி கலந்துரை யாடியுள்ளார்.

ஜப்பானிய அமைச்ச ருடன் நேற்று கொழும் பில் பயனுள்ள கலந்து ரையாடலை நடத்திய தாக அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு மற்றும்மேம்பாட்டு உதவி கள் மற்றும் பல தரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தரப்பு பேச்சு வார்த்தை இடம்பெற்ற தாக கூறினார். (ம-7)

### சட்டவிரோத மருந்துகள் தொடர்பில்

## ஆயுர்வேத திணைக்களம் சட்டநடவடிக்கை

(கொழும்பு)

தங்களது திணைக் களத்தில் பதிவு செய் யாத மருந்து பொருட் களை உள்நாட்டு மருந்து பொருளாக சந் தைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதி ராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆயுர்வேத திணைக் களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களத் தின் உதவி ஆணை யாளரான வைத்தியர் ஜீ.ஹேவாகமகே இத னைக் குறிப்பிட்டுள் ளார்.

வெவ்வேறு பெயர் களில் பேருந்துகள் மற் றும் பொது வெளிகளில் இவ்வாறான மருந்து கள் விற்பனை செய்யப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சந்தை யில் போலியான மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் அது குறித்து ஆயுர்வேத திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் அதன் உதவி ஆணையாளரான வைத்தியர் ஜீ.ஹேவா கமகே குறிப்பிட்டுள் ளார். (ம-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்திற்கு கடன் வழங்குநர்களின் உத்தரவாதம்

## அரசாங்கம் வரவேற்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கைக்கான கடன் வழங்குநர்கள் வழங்கிய உறுதிமொழியை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை அடைய உதவும் ஒரு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் தனியாருடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்ந்தும் உறவுகளை பேணி வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் இலங்கை அதிகாரிகளுடன் ஈடுபட தயாராக இருப்பதாக இலங்கையின் கடன் வழங்குநர்கள் குழு நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்தியா, சீனா மற்றும் பாரிஸ் கிளப்பில் உள்ள நாடுகள் உத்தரவாதம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# சுதந்திர தின நிகழ்வு

# நடமாடும் கழிவறைக்கு ஒன்றரைக் கோடி செலவு

(கொழும்பு)

75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்விற்காக 20 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கிடைத்த கடிதத்தில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, குறித்த சுதந்திர தின நிகழ்வில் நடமாடும் கழிவறைகளுக்கு பதினான்கு மில்லியன் ரூபாயும் மின்சாரத் திரைகளுக்கு 2.7 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளதாக பட்டியல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக 16 நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்

(கொழும்பு)



கொழும்பு மருதானையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தையும் நீர்த்தாரை பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர்.

200 மில்லியன் செலவில் சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதே பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தையும் நீர்த்தாரை பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்களின் பகுதிக்கு கும்பலொன்று சென்று குழப்பத்தை ஏற்படுத்த முயன்றதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இவ்வாறு செயற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்ற போதிலும் சட்டத்தரணிகள் அதனை நிராகரித்துள்ளனர். (4)

# அம்பாறையில் பாரிய கஞ்சாத் தோட்டம் அழிப்பு



(அம்பாறை)

அம்பாறை பக்மிட்டியாவ வனப்பகுதியில் ஒரு ஏக்கரில் கஞ்சா பயிரிடப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று இராணுவப் புலனாய்வுப்பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அருகம்பை விசேட அதிரடிப்படையினர் இணைந்து நடத்திய தேடுதலில் பக் மிட்டியாவ வனப்பகுதியில் பயிரிடப்பட்ட கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன்போது சுமார் 7,500 கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை ஒவ்வொன்றும் சுமார் 3-6 அடி என உயரம் வரை வளர்ந்திருந்தது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாச் செடிகள் அனைத்தும் பாதுகாப்புத் தரப்பினரால் அழிக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை தமன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# சித்தர் பெரிய சந்நியாசிரியாரினால் உருவாக்கப்பட்ட உலகப் பெருமஞ்சம்



இணுவில் பதி, யாழ்ப்பாணத்தில் மத்தியில் அமைந்த தமிழ் சமயப் பண்பாடு மிளிரும் ஒரு கிராமமாகும். இக்கிராமத்தின் அழகும் செழிப்பும் ஆரம்பகால அரசியல் குடியியல் நிலைமைகளின் சிறப்பும் வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண சரித்திரம் போன்ற நூல்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளதை வாசித்து அறியலாம். இவ்வாறு பல மாண்புகளை தன்னகத்தே கொண்ட இக்கிராமம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

இக்கிராமத்தின் கண்ணே எழில் பெருகும் கோபுரங்களும் ஓங்கார நாதமெழுப்பும் கண்டாமணிகளையும் தன்னகத்தே கொண்டு பெரிய கோயில் என அழைக்கப்படும் இணுவைக் கந்தன் திருக்கோயில் ஆகும். இவ்வாலயத்தில் சித்தர்களும் ஞானிகளும் சித்தாந்த ஞானிமார்களும் எனப் பலர் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுள் பெரிய சந்நியாசிரியார் என சிறப்பாக அழைக்கப்படும் சுப்பிரமணியம் எனும் பெரும் மனிதரால் அமைக்கப்பட்டதே இணுவைக் கந்தனின் திருமஞ்சமாகிய உலகப் பெருமஞ்சம் ஆகும்.

இணுவைக் கந்தனுக்கு ஒரு திருமஞ்சம் அமைக்க வேண்டும் என எண்ணி வேண்டிய இப்பெருமானுக்கு அவரது யோக நிஷ்டையில் இம்மஞ்சத்தின் அமைவு புலப்பட்டது.

இத்திருமஞ்சத்தில் முருகப் பெருமான் வருடத்தில் இரு முறை பவனி வருவார். ஒன்று தைப்பூசத் திருநாள். மற்றையது மஹோற்சவத்தின் பன்னிரெண்டாம் நாள் ஆகும். பெருமான் சண்முகரைத் தாங்கி வரும் இம் மஞ்ச பவனியைப் பார்ப்பதற்கு ஆயிரம் கோடி கண்கள் போதாது. மஞ்சத்தை சித்தரித்த சிற்பிகளின் சிற்ப சாஸ்திரங்களை பறைசாற்றி நிற்கின்ற சிற்பசாஸ் திரத்தில் கூறப்பட்டபடி உருவபே தத்தில் சிற்பி தனது மனத்தை ஒரு முகப்படுத்தி திருவுருவங்களை மனதில் பதிய வைத்து பின்னர் பூரணப்படுத்தப்பட்டதை இச்சிற்பக்காட்சிகள் எடுத்தியம்புகின்றன.

இம்மஞ்சத்தில் காணப்படும் கொத்து வேலைகளும் சிவன், பிரம்மா, விஷ்ணு போன்ற தெய்வங்களும் அந்தந்த தெய்வங்களுக்கான புராண, இதிகாசக் கதை அம்சங்களும் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய திருமஞ்சத்தில் எம்பெருமான் இரவுவேளை பவனி வருவார். பகல்வேளை பாற்குடப் பவனி, காவடி பவனி என்பவற்றுடன் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று தொடர்ந்து அன்பர்களின் பொங்கல் கைங்கரியங்களையும் ஏற்ற எம்பெருமான் சூரனது தம்பி தாரகனது கிரவுஞ்சகிரியைப் பிளந்து தாரக சம்காரம் செய்த தைப்பூசத் திருநாளில் எங்களது தீவினைகளை துவசம் செய்து நாம் தற்போது அருள் பெற வருகிறார் மஞ்சமேறி, வாரீர் அவன் அருள் பெற்று உய்வீர்.

ஞானசுந்தல்
மா.ந.பரமேஸ்வரன்.

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்கள் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

மொஹான் சமரநாயக்க மற்றும் பீ.கே.யு.ஏ.விக்கிரமசிங்க ஆகியோரே இவ்வாறு இராஜினாமா செய்துள்ளனர்.

இவ்விருவரும் தமது இராஜினாமா கடிதங்களை நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மற்றும் குறித்த இரு உறுப்பினர்களுக்குமிடையில் மின் துண்டிப்பு தொடர்பில் அண்மையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

இது தொடர்பில் மொஹான் சமரநாயக்க மற்றும் பீ.கே.யு.ஏ.விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடமும் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாதிருக்குமாறு இவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக தொழிற்சங்க உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நிறைவடையும் வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாதிருக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தோடு மின் துண்டிப்பிற்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்படவுமில்லை.

இவ்விவகாரத்திலும் மின் கட்டண அதிகரிப்பு விவகாரத்திலும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் மேற்குறிப்பிட்ட உறுப்பினர்களுக்குமிடையில் தொடர்ந்தும் கருத்து முரண்பாடுகள் நிலவி வந்த நிலையில் அவர்கள் பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனில்...

இங்கிலாந்தின் லண்டன் மாநகரில் இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் 75வது சுதந்திர தினத்தினை கறுப்பு தினமாக இலங்கையில் வடக்கு கிழக்கில் அனுஷ்டித்து போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் இந்த போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக லண்டனில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-7,104)

## தமிழில் தேசிய...

வந்தநிலையில் கோட்டாபய ஆட்சிக் காலத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது புறக்கணிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது. (ம-7)

## தமிழ் மக்களுக்...

இலங்கையின் 75வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு நேற்று சனிக்கிழமை விசேட உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கெனவே நியமித்துள்ளோம்.

அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

அதுபோன்றே ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றார். (ம-7)

## 13வது திருத்தம்...

ஜாங்க அமைச்சர் வி.முரளிதரனை நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை இந்திய இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டினார்.

இலங்கையின் 75வது சுதந்திர தினத்திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் 75வது சுதந்திர தின விழாவில் இந்தியா சார்பில் கலந்து கொள்ள முரளிதரன் நேற்றுக் காலை இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முன்னணியும்...

இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் நேற்று எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெப்ரவரி4 தமிழர்களின் கரிநாள் எனும் தொனிப்பொருளில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியினரால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பிரதேச செயலகத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ். மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

பின்னர் மாவட்ட செயலகத்தின் முன்னால் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,104)

## தமிழர் தேசம்...

சுதந்திர தினத்தைத் தமிழர்களின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி தமிழர்களின் அபிலாசையைச் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய எழுச்சிப் பேரணி ஆரம்பமாகியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும், ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பாளர்கள் தமது மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் பேரணி இடம்பெறுகிறது.

இன்றைய பொருளாதாரப் பின்னணியில் எழுந்துள்ள சூழலில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுவார்த்தை எனும் போலி நாடகத்தினை தோலுரித்து சர்வதேச சமூகத்திற்கு காட்ட வேண்டிய அவசியத்தாலும், கூட்டாக தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை வலுவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையிலும் வடக்கிலிருந்து கிழக்கு வரையான பேரணியொன்றை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலநூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதேநேரம், போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்கலைக்கழக வாயிலுக்கு முன்னால் கூடிய பொலிஸார் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டங்கள் கூடுவதற்கும் வாகன ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்துவதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுத்தனர்.

எனினும் அவ்களது எச்சரிக்கையை மீறி பேரணி ஆரம்பமாகியது. (ம-7,30,33,60,100,104)

## உலகப் பெருமஞ்...

திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு நூற்றாண்டு பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறும். (ம-7)

## ஹர்த்தாலால்...

பேரணிக்கு ஆதரவாக யாழ்.மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.நகரம் உட்பட மாவட்டத்திலுள்ள சகல நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு ஹர்த்தாலுக்கு வர்த்தக சமூகம் ஆதரவு தெரிவித்தது.

மேலும் யாழ்.நகரிலிருந்து இடம்பெறும் தனியார் பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை. இ.போ.ச சேவைகள் மட்டுமே இடம்பெற்றது.

இதனால் நகரப் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைவடைந்து காணப்பட்டது. (ம-7,33,104)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1476
வெற்றி இலக்கங்கள்
தனுசு 8 9 3 7 5 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.02.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1051
T 38 60 61 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 3263
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 04 48 49 55
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1369
O 10 01 08 32 61

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.04
சீட்டிழுப்பு இலக்கம் 330
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 09 36 39 62 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/04
சீட்டிழுப்பு இலக்கம் 5021
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 9 0 9 2 5 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1996
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.04
தினம் சனிக்கிழமை
Y 22 46 52 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,494,460/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.04
சீட்டிழுப்பு இல : 4157
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,276,540/-
வெற்றி இலக்கங்கள் 36 52 59 64
ஆங்கில எழுத்து P
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-02-04
வெற்றி வாரம் 3708
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 12 15 29 35
மீனம்
4737
207
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,640,760/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 28 16 41 48 51
சுப்பர் இலக்கம்
1172
சிவப்பு
2023.02.04
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 303,327,516.20
DLB DEVELOPMENT LOTTERIES
011-2 333 546-47
Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 568
திகதி 2023-02-04
வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 04 18 50
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16,746,504/-
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1822
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,215,380/-
வெற்றி இலக்கங்கள் 10 44 45 75
ஆங்கில எழுத்து X
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் காலமானார்



(சென்னை)

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல திரைப்பட பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் (வயது 78) நேற்றுக்காலமானார்.

மேகமே... மேகமே, மல்லிகை என் மன்னன் மயங்கும்... உள்ளிட்ட காலத்தை வென்று நெஞ்சில் நிலைத்திருக்கும் பல பாடல்களைப் பாடிய வாணி, 19 மொழிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப்பாடியுள்ளார்.

கடந்த வாரம் அவருக்கு பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், விருதைப் பெறுவதற்கு முன்னர் அவர் காலமானது அவரது ரசிகர்கள், நண்பர்கள், நலம் விரும்பிகள் மத்தியில் பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

# மகிந்தவை பிரதமராக்க முயற்சி

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பது தொடர்பில் ஆளும் கட்சிக்குள் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுவார் என அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

பிரதமர் தினேஷ் குணவர்தனவும் எந்த நேரத்திலும் பிரதமர் பதவியை மகிந்தவிடம் ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது. எவ்வாறாயினும், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியை வகிப்பாரா, இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(14288)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## வீடு வாடகைக்கு

K.K.S றோட்டுக்கு மிக அண்மையாகவும் யாழ் Townக்கு 1 1/2 Km தூரத்திற்குள்ளாகவும் அமைந்துள்ள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். நான்கு பேருக்கு உட்பட்ட சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. சைவ உணவகமாக நடத்த விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 076 213 2317

(14507)

## இராஜ மருத்துவம்

கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மது மேகம், வெள்ளைபடுதல், கெர்ப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல்மெலிவு, பருமன், செங்கமாரி, பக்கவாதம், ஆண்மைக் குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம் சிகிச்சை பெறுவதற்கு.

076 274 4488
பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
வல்லை வீதி, சங்கானை. (C-5895)

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி, தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் அருகாமையில் அமைந்துள்ள எட்டுப் பரப்பு காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும்.

கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைக்க சிறந்த இடம்

(14511)

075 077 4745



அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு-2023

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)

தைப்பூச நன்னாள் அன்று காலை 7.40 - 8.40

அனுமதிகளை 18.01.2023 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(14411)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-5885)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


# மரண அறிவித்தல்

## செல்லத்தம்பி பரமலிங்கம்

*(சிவா உணவகம், ஓமந்தை)*



மருதங்குளம் ஓமந்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி பரமலிங்கம் (சிவம்) (சிவா உணவகம், ஓமந்தை) அவர்கள் (03.02.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - சவுந்தரம் அவர்களின் அன்புப் புதல்வனும், பத்மராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகம் - தவமலர் அவர்களின் மருமகனும், ரஜிதன், யதுசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கன்னியாவின் மாமனாரும், பரமானந்தம் (சுகந்தம் சுவையகம் - வவுனியா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், பரமநாதன், பத்மநாதன், பத்மகுமார் மற்றும் பரமேந்திரன், பத்மசிறி (ஆசிரியை - பன்றிகெய்தகுளம்) ஆகி யோரின் அன்புச்சகோதரனும், தர்மராணி, விஜயரஜனி, கேசவதனா, சத்தியபாமா, சிவசுப்பிரமணியம் (மணிஜயப்பா நகைப்பூங்கா - கிளிநொச்சி), திருச்சற்குணேஸ்வரன், முருகவேல், காலஞ்சென்ற தவச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓமந்தை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-5905) தகவல் : குடும்பத்தினர்


# Micom

Yoganantham At mahajana College



Yoganantham with Proffesor At the University



Law of contract, Company Law, Commercial Law, Cambridge english
**(Mahajana College Last time 2 students got A)**
IELTS கற்பிக்கப்படும் Lecturer details

international College of Law, Business& Computer Studies LLB (Col Uni), Dip in Journalisam, Lecturer in Laws, ICFAI University (Hyderabad) University of Ballarat (Australia)



- I Thank to all Members who have been working at Micom

**Mohanarajah Yoganantham (M.Raja Yoganantham) Proprietor**
who issued morethan 20,000 certificates in all Subjects Sofar

**Colombo Branch, Veeramanikathevanthurai, Myliddy K.K.S, Jaffna. Vaverset place, moor Road.**

(14479) **Hotline: 077 395 0215**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org